Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நவீன நாகரிக - நங்கையினரின் மனம் நறைந்த



சிறி கருமாரி நகையகம்

நயம் - நாணயம் - உத்தரவாதம்

தற்போது புதுப்பொலிவுடன்


இல.205/6, கஸ்தூரியார் வீதி,

(ராஜா தியேட்டர் கட்டடத்தில்)

யாழ்ப்பாணம். T.P: 222 5385

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 21 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 23 (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:186

## பூநாறிமரத்தடி விபத்தில் யுவதி பரிதாப மரணம்!



பொலிஸாரால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் யுவதியின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் - பூநாறிமரத்தடியில் நேற்றுமாலை இடம்பெற்ற வாகன விபத்தில் யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுமாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

தனது ஒன்றுவிட்ட அண்ணனுடன் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து யாழ். நகர் நோக்கி வந்துகொண்டிருந்த போது - பூநாறி மரத்தடியில் திடீரென மோட்டார் சைக்கிளில் பிரேக் போட்டதால், யுவதி கீழே விழுந்தார்.


அவ்வேளை எதிரே வந்த கன்ரர் வாகனம் யுவதியின் தலைமீது ஏறியதால் அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த கலைச்செல்வி கமலநாதன் (வயது -19) என்ற யுவதியே உயிரிழந்தவராவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் 'பீல்ட் பைக்' மோதி பாடசாலை மாணவி படுகாயம்!

### சாவகச்சேரியில் நேற்றுமாலை பதற்றம்





(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் மோதி, பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்ததை அடுத்து நேற்று மாலை அங்கு பதற்றநிலை உருவாகியது.

சாவகச்சேரியைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரி மாணவியான விஜயகுமார் துசிந்தா (வயது 15) என்பவரே நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் வன்னியில் புலிகளுடன் சந்திப்பு!

## பொது அமைப்பு பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்






(கொழும்பு)

அமெரிக்க காங்கிரஸின் குடியரசுக் கட்சி உறுப்பினர் டனி கே.டேவிஸ் -கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்து, அரசியற்துறை நடுவப் பணியகத்தில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசனை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்று நண்பகல் 12 மணிமுதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின்போது

# பொது அமைப்பு பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்






(கொழும்பு)

அமெரிக்க காங்கிரஸின் குடியரசுக் கட்சி உறுப்பினர் டனி கே.டேவிஸ் -கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்து, அரசியற்துறை நடுவப் பணியகத்தில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசனை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்று நண்பகல் 12 மணிமுதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின்போது

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலை, சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பாப்பரசர் காலமானார்!



(வத்திக்கான்)

பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் இன்று அதிகாலை 1.37மணியளவில் காலமானார்.

சிறுநீரகக் கோளாறு, இரத்த அழுத்தம், இருதய நோய் என்பவற்றால் பீடிக்கப்பட்டு இரண்டு நாட்களாக உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பாப்பரசருக்கு நேற்றிரவு கடும் காய்ச்சல் ஏற்பட்டது.

இதையடுத்து பாப்பரசரின் உடல் நிலை மிகமோசமாக கட்டத்தை அடைந்

## பிந்திய செய்தி!

தது. நேற்றிரவு சுயநினைவை இழக்க ஆரம்பித்த பாப்பரசர், இன்று அதிகாலை மரணமானதாக வத்திக்கான் அதிகாரிகளால் உத்தியோகபூர்வமாக இன்று அதிகாலை இரண்டு மணியளவில் (இலங்கைநேரம்) அறிவிக்கப்பட்டது.

பாப்பரசரின் உடல்நிலை கடந்த சிலநாட்களாக மோசமடைய ஆரம்பித்ததை அடுத்து 70 ஆயிரத்திற்கு அதிகமான மக்களும்,கத்தோலிக்கமத குருக்கள்,அருட்சகோதரிகள் வத்திக்கானில் ஒன்று கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

84 வயதான பாப்பரசர் ஜோன் போல் கடந்த 26 வருடங்களாக இந்தப் பதவியில் இருந்து வந்தவராவார்.

போலந்து நாட்டில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கரோல் வொஜ்ரைலா என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் மிகச்சிறந்த ஒரு மாணாக்கராக விளங்கியதுடன், பின்னர் மொத்தம் 11 மொழிகளில் அனாயாசமாகப் பேச, எழுதத் தெரிந்த ஒருவராகவும் இன்னும் பல மொழிகளை ஓரளவு அறிந்து வைத்திருந்தவராகவும் விளங்கி னார்.

1981ல் சூட்டுக் காயங்களுக்காக சத்திர சிகிச்சைக்கும், 1992இல் வயிற்றில் கட்டியொன்று இருந்ததால் சத்திரசிகிச் சைக்கும், 1994 இல் இடுப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இத்தாலிய வெளியுறவு அதிகாரிகளுடன் புலிகளின் அரசியல் விவகாரக்குழு பேச்சு!



ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் இத்தாலிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினர்.

ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் - இத்தாலியில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனைகளை நடத்தினர். (12 ஆம் பக்கம் பார்க்க)


UH UNIT

Whenever you thing about computer products the right place to touch first for Genuine, Technology & Exprienced

3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்

புது வருட Maha Sales நல்ல விலையில், சிறந்த தரத்தில் கிடைக்கும் டைபர்கள் மற்றும் கணனி உதிரிகள்

PIII கணனிகள்

Intel 2.4 P4 கணனிகள் புதிய மொனிட்டருடன்

@ Colombo based price

An Indian Engineer's Centre

Each Computer with finest test-ups & modeled finishing

347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.

# நற்கருணை ஆண்டை முன்னிட்டு யாழில் நற்கருணைப் பேரணி

(யாழ்ப்பாணம்)

நற்கருணை ஆண்டைக் கொண்டாடும் நோக்குடன் நாவாந்துறை பங்கும் யாழ். அடைக்கல அன்னை ஆலயப் பங்கும் இணைந்து நடத்தும் மாபெரும் நற்கருணைப் பேரணி இன்று பிற்பகல் 5 மணிக்கு நாவாந்துறையில் ஆரம்பமாகவுள்ளது.

நாவாந்துறைப் பங்குத் தந்தை எம். எக்ஸ். கருணாரட்ணம் கிளி அடிகளாரும், யாழ். அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்தந்தை எம்.ஈ.பயஸ் அடிகளாரும் இணைந்து இந்தப் பவனியை ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்தப் பவனியானது நாவாந்துறைப் பரலோக மாதா ஆலயத்தில் ஆரம்பமாகி ஐந்து இடங்களில் தரித்து நின்று யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தை வந்தடையும்.

முதல் தரிப்பு நாவாந்துறை நீக்கிலார் ஆலயத்திலும், இரண்டாவது தரிப்பு மானிப்பாய் வீதி ஐந்து சந்தியிலும், மூன்றாவது தரிப்பு கஸ்தூரியார் வீதி நாவலர் சந்தியிலும், நான்காவது தரிப்பு பஸ் நிலைய லைடன் புடவை நிலையம் முன்பாகவும், ஐந்தாவது தரிப்பு இரண்டாம் குறுக்குத்தெருவிலும் இடம்பெறவுள்ளது. இறுதியாக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இப்பவனி நிறைவு பெறும்.

கத்தோலிக்க மக்கள் அனைவரையும் இப்பவனியில் கலந்து இறையருளைப் பெற்றுச்செல்லுமாறு இரு பங்குத்தந்தையர்களும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## அடையாள அட்டை கண்டெடுப்பு

நாகர் கோவில் கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி கமலேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும்; தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு வழங்கிய பயண அனுமதி அட்டை ஆகியன கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# மீளக்குடியமர்ந்த மக்களுடன் ஐ.ஓ.எம் நிறுவனம் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பினரால் (ஐ.ஓ.எம்) 2003ம் ஆண்டுக்கு பின்னர் இந்தியாவிலிருந்து யு.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் நாடுதிரும்பியவர்களுக்கான கலந்துரையாடல் நேற்று காலை யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அரச கட்டமைப்பு, சுகாதாரம், மிதிவெடி, உளவளத்துணை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் விளக்கப்பட்டது.


புலம் பெயர்ந்தவர்களுக்கான அமைப்பினரால் மீளக்குடியமர்ந்தவர்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கான பொருட்களை அவர்களுக்குரிய பிரதேச செயலகங்களுக்கூடாக எதிர்வரும் காலங்களில் வழங்கப்படவுள்ளதாக ஐ.ஓ.எம் நிறுவன அதிகாரி தெரிவித்தார்.

# பணச்சுரண்டல் நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

எ. அருட்பிரகாசம் எழுதிய பணச்சுரண்டல் நூல் அறிமுக விழா நேற்று மாலை 5 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகரசபை ஆணையாளர் க. குணராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நூலின் ஆய்வுரையை பொருளியல் துறை பேராசிரியர் வி. நித்தியானந்தன், ஊற்று நிறுவனப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர் ந. பேரின்பநாதன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.



நூலினை நூலின் ஆசிரியர் அருட்பிரகாசம் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்விற்கு பேராசிரியர்கள், கல்விமான்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

# ஆற்றுப்படுத்தல் நிகழ்வு

(பருத்தித்துறை)

மகளிர் அபிவிருத்தி நிலையம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வினை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிகழ்வின் தொடரில் காலை தும்பளை கிழக்கில் உள்ள மக்களுக்கு 'பெண்கள் பாதுகாப்பும் அரசாங்க செயற்பாடும்' எனும் பயிற்சி நெறி நிகழ்வினை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்விற்கு மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சறோஜா சிவச்சந்திரன், பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.த. சண்முகநாதன், பருத்தித்துறை கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஸ்ரீபதி மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை நெறிப்படுத்தி வரும் எம். மகேந்திரன், தர்சினி சரவணமுத்து, ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சிறுவிளம்பரம்

## தவறிவிட்டது

இமானுவல் பாலச்சந்திரன் டானியல் சுரேன் (832642924V) என்பவரின் தே.அ. அட்டையும் சாரதி அனுமதிப் பத்திரமும் போர்சுடன் - மருதனார் மடத்திற்கும் சங்குவேலிக்குமிடையில் 24.03.2005 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கன்டெடுத்தவர்கள் - டானியல், சங்குவேலி வடக்கு, மானிப்பாய் என்னும் முகவரிக்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொ. இல. 222 5830. (11110)


நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சரத்குமார் நமீதா வடிவேலு நடித்த
குளிரூட்டப்பட்டது
ஏய்
விரைவில் குருதேவா
கா.நே.(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

ராஜா யாழ்ப்பாணம்
சில தினங்களுக்கு மட்டும்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக், நாசர், நடித்த
தமிழன்
(சி-3980)
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்

மனோகரா திரையரங்கு
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த
யாழ்ப்பாணம்

(சிறந்த குடும்பு காவியம்)
(சி-3978)
கா.நேரம்: 10.30, 2.30,6.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா நடித்த
கில்லி
(சி-3976)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந், வடிவேலு, மும்தாஜ நடித்த
லண்டன்
இயக்கம் - சுந்தர். சி
(சி-3979)
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00


# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் நிலவுகின்ற வழிகாட்டல்ஆலோசனை சேவை, விசேட கல்வி ஆகிய இரு பாடங்களுக்குமான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வழிகாட்டல் ஆலோசனை சேவை பதவிக்கு விண்ணப்பிப்போர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் 04 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி பெற்றவராகவோ அல்லது பட்டப்படிப்பில் உளவியல் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை ஒரு பாடமாகப் பயின்றவராகவோ இருக்க வேண்டும்.

விசேட கல்விச் சேவைக்கு விண்ணப்பிப்போர் மாகாண கல்வித் திணைக்களம் அல்லது தேசிய கல்வி நிறுவகம் அல்லது கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட விசேட கல்விப் பயிற்சியைப் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இந்த இரு பதவிகளுக்கும் விண்ணப்பிப்போர் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2-1, வகுப்பு 2-11 ஐச் சேர்ந்த பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருக்க வேண்டும்.

தமது விண்ணப்பப்படிவங்களில் இரு பிரதிகளைத் தயாரித்து எதிர் வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தும்பளையில் வீடுகள் கையளிப்பு

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று வடமராட்சி தும்பளை கிழக்கு கிராமத்தில் நடைபெற்றது.

தும்பளை கிழக்கு உதயசூரியன் கடற்றொழிலாளர் சங்க செயலாளர் மா.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த மதகுரு ஏற்றி வைத்தார்.

தும்பளை கிழக்கில் அமைக்கப்பட்ட வீடுகளை கடற்புலிகளின் வடமராட்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். பாலர் பாடசாலையை வடமராட்சி மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு திறந்து வைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் உதயசூரியன் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர், கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவப் பாதிரியார், பருத்தித்துறைப் பதில் பிரதேச செயலர் ராஜ்குமார், தும்பளை கிழக்கு கிராம அலுவலர் சிவலிங்கம், போரூட் நிறுவன திட்டப்பணிப்பாளர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன முகாமையாளர், அனர்த்த புனர்வாழ்வுச் செயலணி இணைப்பாளர் பாலையா உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

தும்பளை கிழக்கில் 105 வீடுகள் நேற்று கையளிக்கப்பட்டன. இவற்றில் வீடுகளை கியூடெக் அமைப்பும், சமயலறைகளை LEADS அமைப்பும், கிணறு, பாலர்பாடசாலைகளை போரூட் அமைப்பும், மலசல கூடங்களை பட்டினிக்கெதிரான இயக்கமும் அமைத்துக்கொடுத்துள்ளன. (14)

# கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள்

லைவன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வை. அர்ஜன் ஞாபகார்த்தமாகவும் விளையாட்டுக்கழகத்தின் 28வது வருட நிறைவையொட்டியும் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடர் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அரியாலை ஐக்கியம் வி. கழக அணியைத் எதிர்த்து ராஜா வி. கழக அணியும் காலை 10.15 மணிக்கு நல்லூர் ஐக்கிய வி. கழக அணியை எதிர்த்து இளம் தென்றல் (ஏ) அணியும் 11.30 மணிக்கு ஐங்கரன் வி. கழக அணியை எதிர்த்து ஈச்சமோட்டை (பி) அணியும், மாலை 3 மணிக்கு ஐ.சி.சி. கழக அணியை எதிர்த்து டயானா வி.கழக அணியும், மாலை 4 மணிக்கு லைவன் ஸ்ரார் அணியை எதிர்த்து விபுலானந்தர் வி. கழக அணியும் மோதவுள்ளன.

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி

(வலிகாமம்)

வலிதென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட குடும்ப அட்டை வழங்கப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி நாளை ஏற்றப்படவுள்ளது.

நாளை காலை 9 மணி முதல் 10.30 மணிவரை மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்திலும், 10.30 முதல் 12 மணி வரை மானிப்பாய் பாரதி சனசமூகநிலையத்திலும், 1 மணி முதல் 4.30 மணி வரை பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும் ஏற்றப்படவுள்ளது.

நாளை மறுதினம் காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை மானிப்பாய்கிழக்கு ஆனந்த வைரவர் கோவிலடியிலும், 10.30 முதல் 12 மணி வரை மெமோரியல் வீதியில் உள்ள திருப்பதி ரெலிக்கொம்மிலும், நண்பகல் 1 மணி முதல் 4.30 வரை நவாலி வேலிக்கை பிள்ளையார் கோவிலடியிலுள்ள கிராம அலுவலர் அலுவலகத்திலும், புதன்கிழமை காலை 9மணி முதல் 12.30 மணி வரை கட்டுடை கிராம அலுவலர் அலுவலகத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கு இதுவரை குடும்ப அட்டைகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் அன்றைய தினம் வருமான மேற்பார்வையாளர் சுகாதார மேற்பார்வை அலுவலகரிடம் ருபா 50ஐச் செலுத்திய பின்னர் ஊசி போட அனுமதிக்கப்படும் என பிரதேசசபை அறிவித்துள்ளது.


எங்கள் அன்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கு
ஒரு நற்செய்தி
எங்கள் தலைமைக்காரியாலயம் கொழும்பு சில தவிர்க்கமுடியாத காரணங்களால் மூடவேண்டியேற்பட்டுவிட்டது. அதன் நிமித்தம் அங்கிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை (ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட புத்தகங்கள்) பாவனையாளர்களின் நன்மை கருதி கடந்த 01.04.2004 தொடக்கம் இன்று வரை எம்மிடம் பொருட்கள் கொள்வனவு செய்த சிட்டை (Bill) வைத்திருப்பவர்களுக்கு 250.00 ரூபாவிற்கு குறையாத புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். நேரில் வரவும்
அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றிலிருந்து மேலும் ஒரு வாரத்துக்கு (15.04.2005 வரை) நீடிக்கப்படவுள்ளது.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
எண். 212 - 214, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். நிர்வாகி - ACD
(C/3993)

புதுவருடத்தை முன்னிட்டு
விஷேட கழிவு
* இலவசமாக கண்களை பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
* இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களை குறைந்த விலையில் கட்டிடவும்.
* மிதப்புப்பற்களுக்கு நவீன முறையில் கிளிப் போட்டுக் கொள்ளவும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்
எரிக்கணேஷ்

பல் முக்கு கண்ணாடியகம்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல. 222 - 2486
கிளை :- கொக்குவில், சுன்னாகம்
(C/4005)

# சமாதான நடவடிக்கைகளுக்காக நாட்டைக் காட்டிக்கொடுக்க முடியாது

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நாட்டைக் காட்டிக்கொடுக்கப்போவதில்லையென்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி தெல்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒவ்வொரு இனங்களின் அடையாளங்களைப் பாதுகாக்கும் அதே வேளை, ஒரு நாட்டுக்குள் அனைவரும் இணைந்து வாழும் சூழல் ஒன்றை உருவாக்குவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

ஒவ்வொருவரும் பேதத்துடன் மோதிக்கொள்ளும் காலம் முடிவடைந்துள்ளது. இனங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டால் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது.

ஒவ்வொருவரும் தமது இன அடையாளங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளை, மற்றொருவரது இன அடையாளம் தொடர்பான நம்பிக்கையீனத்தைக் களைந்து - அனைவரும் இணைந்து ஒரே நாட்டுக்குள் வாழக்கூடிய சூழலை உருவாக்குவது எமது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்தக் கடப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்பை ஜனாதிபதி எடுத்துள்ளதாகவும், நாடு துண்டாடப்பட இடமளிக்கப்படமாட்டாது என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கட்சித் தலைவர்களுடனேயே முதலில் பேசவேண்டுமாம்!

## அமைச்சர்குழு கோரிக்கை

(கொழும்பு)

தேசிய பிரச்சினை குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடவேண்டுமென, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்க அமைச்சர்கள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த சில தினங்களுக்குள் ஜனாதிபதியைச் சந்தித்து, இது தொடர்பாக எடுத்து விளக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

தேசிய ரீதியாக - முக்கிய பிரச்சினை தொடர்பாக உரிய விதமாகக் கலந்துரையாடாமல் தீர்மானம் எடுத்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள கட்சிகளிடையேயான நல்லுறவில் விரிசல் ஏற்படுமென அமைச்சர்கள் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன் அமைச்சர்கள் குழு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# மகிந்தானந்தவுக்கு எதிராக மானநஷ்ட வழக்கு தாக்கல்

(கொழும்பு)

மின்சக்தி மற்றும் எரிபொருள்துறை பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய, தொழிலமைச்சர் அதாவுட செனிவிரத்ன தீர்மானித்துள்ளார்.

கடந்த ஞாயிறு லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் மூலம் தனக்கு அபகீர்த்தியை மகிந்தானந்த ஏற்படுத்திவிட்டதாகத் தெரிவித்தே பிரதியமைச்சருக்கும், லங்காதீப பத்திரிகைக்கும் எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் -

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தனது சட்டத்தரணிகளுக்கு தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் அதாவுட செனிவிரத்ன தெரிவித்தார். (தே)

# புதுவருடத்துக்குப் பின்னர் சொல்ஹெய்ம் வருகிறார்!



(ஒஸ்லோ)

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் தடைப்பட்டுப்போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே சொல்ஹெய்ம் இலங்கை வரவுள்ளார்.

எனினும் இவரது விஜயத்துக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

புதுவருடத்துக்குப் பின்னர் இலங்கை வரும் சொல்ஹெய்ம் - அரசாங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களையும், விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இவர் பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது குறித்தும் பேசுவார் எனக் கூறப்படுகிறது. இந்த ஆண்டில் சொல்ஹெய்ம் இலங்கைக்கு மேற்கொள்ளும் மூன்றாவது விஜயம் இதுவாகும்.

# சிறந்த தலைவர் விருது சந்திரிகா பெற்றார்!



(கொழும்பு)

2005 ஆம் ஆண்டின் சிலிம் தேசிய விருது வழங்கும் நிகழ்வில் - இந்த ஆண்டின் சிறந்த தலைவியாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சிலிம் நிறுவனத்தால் நடத்தப்பட்ட இந்த விருது வழங்கும் விழாவில் இந்தமுறை சிறந்த தலைவர் அல்லது தலைவியை தெரிவுசெய்யும் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த திங்கள் இடம்பெற்ற இந்த விழாவில் இந்த ஆண்டுக்கான சிறந்த ஐந்து தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்படி - இந்த வருடத்தின் சிறந்த தலைவியாக முதலிடத்தை ஜனாதிபதி சந்திரிகாவும், இரண்டாம் இடத்தை ஜே.வி.பியின் பிரசாரச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவும், மூன்றாம் இடத்தைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், நான்காம் இடத்தை ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவும், ஐந்தாவது இடத்தை ஐ.தே.கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும் பெற்றுள்ளனர். (தே)

# ஈ.மெயில் மூலமாக புலிகளின் பெயரில் ஜெயலலிதாவுக்கு கொலை மிரட்டல் விடுத்த பெண் கைது!



(சென்னை)

விடுதலைப் புலிகளின் பெயரில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஈ.மெயில் மூலமாகக் கொலை மிரட்டல் விடுத்த பட்டதாரி இளம்பெண் சென்னையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

சென்னையில் உள்ள ஜெயா ரி.வி .அலுவலகத்தில் பொதுமக்களின் கருத்துக்களை அறிவதற்காக தனியான இணையத்தளம் உள்ளது. இந்த இணையத்தளத்தில் ஈ.மெயில் மூலம் கடந்த 12 ஆம் திகதி வந்த கடிதத்தை அங்கு வெப் டிசைனராகப் பணிபுரியும் பாலகிருஷ்ணன் படித்து அதிர்ச்சியடைந்தார்.

விடுதலைப் புலிகளின் பெயரில் ஜெயலலிதாவுக்கு ஆங்கிலத்தில் -

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஒரு தகவல். இது தகவல் மட்டுமல்ல எச்சரிக்கையும் கூட. வரும் சட்ட சபைத் தேர்தலில் நீங்கள் ஜெயிக்கப் போவதில்லை. நீங்கள் தோல்வியடைந்த பிறகு இருக்கமாட்டீர்கள். இது விடுதலைப் புலிகளின் எச்சரிக்கை. நீங்கள் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் கொலை செய்யப்படுவீர்கள். இதை சாதாரணமாக எடுத்துக்கொள்ளவேண்டாம். கடுமையாக எடுத்துக்கொள்ளவும். இப்படிக்கு கன் பவர் (Gun power) எல்.ரி.ரி.ஈ. எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஜெயா ரி.வி அலுவலக துணைத் தலைவர் எஸ்.ரங்கநாதன் - பொலிஸ் கொமிஷனர் நடராஜிற்கு முறைப்பாடு செய்ததையடுத்து நடத்தபபட்ட விசாரணையில் சென்னை அமிஞ்சிக்கரை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேச்சுரல் சிரானைட்ஸ் நிறுவனத்தின் கணினி இயக்குனராகப் பணிபுரியும் கலைவாணி (வயது 20) என்பவரால் அனுப்பப்பட்டதாகத் தெரியவந்தது.

பொலிஸ் விசாரணைகளின் போது முதலில் உண்மையை ஒப்புக்கொள்ளமறுத்த கலைவாணி - பின்னர் பொலிஸார் துருவித்துருவி விசாரித்ததையடுத்து, உண்மையயை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளிக்கையில் -

எனக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை. பத்திரிகைச் செய்திகளைப் படித்து விளையாட்டாக இந்தக் கடிதத்தை அனுப்பிவிட்டேன். எனது தந்தை தி.மு.க அனுதாபி. எங்களுக்கு அ.தி.மு.கவைப் பிடிக்காது. கடிதம் அனுப்பியதற்காக நான் வருந்துகிறேன் எனத் தெரிவித்தார்.

கலைவாணி மீது கொலை மிரட்டல் உட்பட இரண்டு சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட இவர் சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது - அவரை 15 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதையடுத்து சைதாப்பேட்டை, சிறைச்சாலையில் சிறையிலடைக்கப்பட்டார்.

இதேவேளை கலைவாணியின் தந்தை மற்றும் தம்பிமாரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது விடுதலைப் புலிகளுடன் அவர்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லையெனத் தெரியவந்தது.

# ஜாதிக ஹெல உறுமயவில் இரண்டு புதிய பதவிகள்!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் உயர் பீடமான சுப்ரீம் கவுன்சிலில் இரண்டு புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு, அவற்றுக்கு இரு முக்கியஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கட்சியின் இரண்டாவது மாநாடு கொள்ளுப்பிட்டி ஜெயசேகரமயவில் நடைபெற்றபோதே - இந்தப் பதவிகள் உருவாக்கப்பட்டு, நியமனங்களும் வழங்கப்பட்டன.

கொள்கை வகுப்பாளர் என்ற புதிய பதவிக்கு, கட்சியின் சிரேஷ்ட தலைவர் சம்பிக்க ரணவக்கவும், பொருளாளர் பதவிக்கு முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.எம்.ஜி.பி. கொட்டகதெனியவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கட்சியின் பிரதித் தலைவர் வண ஓமல்பே சோபித தேரர் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட அதேவேளை, பிரதித் தலைவர் பதவி இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவராக எல்லாவெல மேதானந்த தேரரும், தலைவராக கொட்டபொல அமரகீர்த்தி தேரரும் தொடர்ந்து நீடிக்கும் அதேவேளை, அத்துரலிய ரத்தின தேரர் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஜே.வி.பி நடத்தும் வீரர்கள் தினம்

ஜே.வி.பியின் 35 ஆவது வீரர்கள் ஞாபகார்த்த நிகழ்வு நாளை மறுதினம் மாலை 3 மணிக்கு அநுராதபுர சல்காது மைதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜே.வி.பியின் உயிரிழந்த அங்கத்தவர்களின் ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ள வீரர்கள் ஞாபகார்த்த நிகழ்வின் இந்த வருடத்துக்கான தொனிப்பொருள் - சதா காலமும் நினைவுகொள்ளும் சகோதரர்கள் என்பதாகும்.

வீரர்கள் ஞாபகார்த்த நினைவுரையைஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா நிகழ்த்துவதுடன், ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார். (தே)

# சுனாமி எச்சரிக்கை அமைப்பை ஜப்பான் தற்காலிகமாக நிறுவியது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் குறித்து இந்து சமுத்திர நாடுகளை எச்சரிக்கை செய்வதற்கான தற்காலிக முன்னெச்சரிக்கை நிலையம் ஒன்றை ஜப்பான் ஆரம்பித்துள்ளது.

இந்த முன்னெச்சரிக்கை நிலையம் - றிச்டர் அளவுகோலில் 7 புள்ளிகளுக்கு மேற்பட்ட புவியதிர்வு ஏற்பட்டு சுனாமி ஏற்படும் அபாயம் இருந்தால், இந்து சமுத்திரத்திலுள்ள நாடுகளுக்கு அரை மணித்தியாலங்களுக்குள்ளாகவே பக்ஸ் மூலம் முன்னெச்சரிக்கை செய்யும்.

தற்போது அமெரிக்காவும், ஜப்பானுமே சுனாமி முன்னெச்சரிக்கை அமைப்புகளைக் கொண்டிருக்கின்றன.

ஜப்பானிய வளிமண்டல ஏஜென்சி இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் சுனாமி முன்னெச்சரிக்கைத் தகவல்களை - புவியதிர்வு ஏற்பட்டு 30 நிமிடங்களுக்குள் பக்ஸ் மூலம் எச்சரிக்கை செய்வதற்கு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளது. இந்த வலைப்பின்னல் 25 நாடுகளுடன் ஏற்படுத்துவதற்கு ஜப்பான் திட்டமிட் டுள்ளது.

இந்தமுறை குறித்து கடந்த 28 ஆம் திகதி 8.7 புள்ளி புவியதிர்வு சுமாத்திராவில் ஏற்பட்டபோது பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. இதன்போது ஜப்பானிய ஏஜென்சி 11 நாடுகளுக்கு பக்ஸ் மூலம் இந்த எச்சரிக்கைத் தகவல்களை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதல் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம்:
# பாகிஸ்தானை சுருட்டியது இந்தியா!



பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில், இந்திய அணி 87 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இந்திய-பாகிஸ்தான் அணிகளிடையேயான முதல் ஒருநாள் போட்டி கொச்சியில் நேற்று நடந்தது.

இந்திய அணியின் கப்டன் கங்கூலி நாணயச் சுழற்சியில் வென்று, தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார். தொடக்க வீரர்களாக ஷேவாக்கும், டெண்டுல்கரும் களமிறங்கினார்கள். மொகமட் சமி வீசிய ஆட்டத்தின் முதல் பந்திலேயே ஷேவாக் ஆட்டமிழக்க வேண்டியவர். அவர் அடித்த பந்தை மொகமட் ஹபீஸ் பிடியெடுக்கத் தவறினார்.

நவீட்-உல்-ஹசன் 2ஆவது



ஓவரை வீசினார். 3ஆவது பந்தில் டெண்டுல்கர் பவுண்டரி அடித்தார். அதற்கு அடுத்த பந்தில் அவர் ஆட்டமிழந்தார். வானத்தை நோக்கி தூக்கியடித்த பந்தை யுகானா பிடியெடுத்தார். அடுத்து களமிறங்கிய கப்டன் கங்கூலி தான் சந்தித்த முதல் பந்திலேயே போல்டானார்.

4 ஓட்டங்களை எடுப்பதற்குள் இந்தியா 2 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

3ஆவது விக்கெட்டான ஷேவாக்-ராவிட் ஜோடி மேலும் விக்கெட் விழாமல் இருக்கும் வகையில் பொறுமையுடன் ஆடியது.

நேரம் செல்லச் செல்ல இருவரும் அடித்து ஆட ஆரம்பித்தார்கள். இதனால் இந்திய அணி 21.5 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

ஷேவாக்கின் ஆட்டத்தில் அனல் பறந்தது. அவர் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் பந்துகளை விளாசித் தள்ளி ஓட்டங்களைக் குவித்தார். சிக்ஸர்களும், பவுண்டரி களுமாய் அடித்து ரசிகர்களுக்கு விருந்து



படைத்தார். அர்ஷத்கான் வீசிய ஒரு ஓவரில் அவர் 12 ஓட்டங்களை எடுத்தார். அந்த ஓவரில் 13 ஓட்டங்கள் கிடைத்தன.

ஷேவாக் அதிரடியாக ஆடிச் சதமடித்தார். 84 பந்துகளில் 9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 100 ஓட்டங்களைத் தொட்டார். இந்திய அணி 33.5ஆவது ஓவரில் 200 ஓட்டங்களைத் தொட்டது.

அபாரமாக ஆடிக்கொண்டிருந்த ஷேவாக், அப்துல் ரசாக்கின் பந்தில் போல்டானார். அவர் 95 பந்துகளில் 9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 108 ஓட்டங்களை எடுத்தார். அவரது 7ஆவது சதம் இதுவாகும். பாகிஸ்தானுக்கு எதிரான முதல் சதமிதுவாகும். அப்போது இந்தியாவின் ஸ்கோர் 205 ஆக இருந்தது. ராவிட் 81 ஓட்டங்களில் இருந்தார்.

ஷேவாக்-ராவிட் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 201 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்தது. அடுத்து யுவராஜ் சிங் களமிறங்கினார்.

ஸ்கோர் 241அக உயர்ந்தபோது யுவராஜ் 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து கைவ் களமிறங்கினார். 43ஆவது ஓவரில் இந்தியா 250 ஓட்டங்களைத் தொட்டது.



ராவிட் பொறுப்புடன் விளையாடி சதமடித்தார். 134 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களை எடுத்தார். அவர் சதமடித்த சிறிது நேரத்தில் கைவ் 7 ஓட்டங்களிலும், அடுத்துவந்த டோனி 3 ஓட்டங்களிலும் வெளியேறினார்கள்.

மிகவும் சோர்வடைந்த ராவிட் 104 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ரன் அவுட்டானார். விக்கெட்டுக்கள் மளமளவென்று சரிந்ததால், கடைசியில் ஓட்டவேகம் குறைந்தது.

இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 281 ஓட்டங்களைக் குவித்தது. ஹர்பஜன் சிங் 14 ஓட்டங்களும், சகீர்கான் 2 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் அர்ஷத்கான் 4 விக்கெட்டுக்களையும், நவீட்-உல்-ஹசன் 2 விக்கெட்டுக்களையும் எடுத்தனர்.

பின்னர் பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணியின் திறமையான பந்துவீச்சினால், பாகிஸ்தான்



194 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அக்மல் -17, சல்மான் பட்-26, சொகைப் மலிக் -4, யுகானா-0, இன்சமாம் -37, மொகமட் ஹபீஸ் -42, அப்துல் ரசாக் -5, அப்ரிடி -8, சமி -2, நவீட்-உல்-ஹசன் -25 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அர்ஷத்கான் 14 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன் மூலம் இந்தியா 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் சோபிக்காத டெண்டுல்கர் பந்துவீச்சில் கைகொடுத்தார். அவர் 50 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பாலாஜி, சகீர்கான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும், நெஹ்ரா ஒரு விக்கெட்டையும் எடுத்தனர்.

ஆட்ட நாயகனாக வீரேந்தர் ஷேவாக் தெரிவு செய்யப்பட்டார்.

# பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் தடையிலிருந்து தப்பமுடியாது!




(கராச்சி)

பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் ஒரு டெஸ்ட் போட்டித் தடையிலிருந்து தப்பமுடியாது எனவும், இவருக்காக மேன்முறையீடு செய்ய வாய்ப்பில்லை எனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துவிட்டது.

இந்தியாவுக்கு எதிரான பெங்களூர் டெஸ்டில் இன்சமாம் அதிகப்படியாக முறையீடு செய்தார். இதற்காக ஒரு டெஸ்ட் தடையும், சம்பளத்தில் இருந்து 30 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சார்பில் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் மேன்முறையீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இதற்கு வாய்ப்பில்லை என்று கூறி கைவிரித்துவிட்டார் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இயக்குநர் அபாஸ் ஜெய்தி.

இன்சமாமின் விடயத்தில் ஐ.சி.சி., விதிமுறைகள் மிகவும் தெளிவாக உள்ளன. விதிமுறைப்படி தடையை எதிர்த்து அப்பீல் செய்ய இயலாது. தற்போதைய சூழலில், எதிர்வரும் ஜுனில் நடைபெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் இன்சமாம் பங்கேற்க இயலாது என்றார்.

# லாராவுக்கு கொலை மிரட்டல்!



விளம்பர ஒப்பந்த சர்ச்சையில் சம்பந்தப்பட்ட லாரா உட்பட முன்னணி வீரர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டில் விளம்பர சர்ச்சையால் ஏற்பட்ட பிரச்சினை நீடித்துவருகிறது. தனிப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச்செய்யும்படி சபை வலியுறுத்தியது. இதை ஏற்க மறுத்த லாரா, கிறிஸ் கெய்ல், சர்வான், எட்வேர்ட்ஸ், வெய்னி பிராவோ, வெய்னி சிமித் மற்றும் ரவி ராம்போல் ஆகிய வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டனர். தென்னாபிரிக்கத் தொடருக்கு சந்தர்போல் தலைமையில் புதிய அணி அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே நீக்கப்பட்ட வீரர்களுக்கு எதிராக பல்வேறு தரப்பிலும் இருந்து மிரட்டல் வருவதாக, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர்கள் சங்கத் தலைவர் தினானாத் ராம் நரேன் தெரிவித்தார்.

இவர் கூறுகையில்- மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகள் எல்லாம் கொடூரமானதாக உள்ளது. தன்னிச்சையாக வீரர்களை நீக்குகின்றனர். விளம்பரதாரர்களுக்காக கிரிக்கெட்டை தியாகம் செய்யத் தயாராகிவிட்டனர். லாரா உட்பட ஏழு வீரர்களுக்கு - கிரிக்கெட் சபை, விளம்பரதாரர்கள், அரசியல்வாதிகள் எனப் பல்வேறு தரப்பிலுமிருந்து அன்றாடம் மிரட்டல் விடுக்கப்படுகிறது. சிலர் கிரிக்கெட்டில் ஈடுபடக்கூடாது என்கின்றனர். சிலர் கொலைசெய்யப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர் என்றார்.

இந்தப் புகாரை மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை மறுத்துள்ளது. இது நேர்மையற்ற குற்றச்சாட்டு என்று அது கூறியுள்ளது.

# கோப்பாய் பிரதேச செயலக உதைபந்தாட்டப் போட்டிகள்!

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம், அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம், புத்தூர் கிழக்கு குமரகுருபரன் விளையாட்டுக் கழகம், சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகம், நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம், புத்தூர் ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம், உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம், அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகம், வளர்பிறை விளையாட்டுக் கழகம், புத்தூர் எவரெஸ்ற் விளையாட்டுக் கழகம், உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம், புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன மோதவுள்ளன.

# உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

இன்றைய ஆட்டத்தில் மாலை 4 மணிக்கு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு நடைபெறும் இன்னொரு ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்லஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# 2007 உலகக்கிண்ணப் போட்டி: அணிகளின் பிரிவுகள் அறிவிப்பு!

2007 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதற்சுற்று ஆட்டத்தில் இலங்கை, பங்களாதேஷ், இந்தியா ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் இந்தப் போட்டிக்கான தரவரிசையை ஐ.சி.சி. நேற்றுமுன்தினம் அறிவித்தது.

ஏப்ரல் முதலாம் திகதி நிலவரப்படி, உலகத் தரவரிசையில் இடம்பெற்றுள்ள இடத்தின் அடிப்படையில் 11 அணிகள் எந்தெந்தப் பிரிவில் இடம் பெறுகின்றன என்பதை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இதைத் தவிர எதிர்வரும் ஜுலையில் நடைபெறும் ஐ.சி.சி. கிண்ணப் போட்டியில் முதல் 5 இடங்களைப் பெறும் அணிகளும் உலகக்கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெறுகின்றன.

அதன்படி மொத்தம் 16 அணிகள், தலா நான்கு அணிகள் கொண்ட 4 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் லீக் முறையில் விளையாடும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 8 பிரிவுக்கு முன்னேறும்.

சுப்பர் 8 பிரிவில், முதல் பிரிவில் தான் விளையாடிய அணியைத்தவிர, மற்ற அணிகளுடன் ஒவ்வொரு அணியும் விளையாடவேண்டும். மேலும் முதல் பிரிவிலிருந்து சுப்பர் 8 பிரிவுக்கு தன்னுடைய பிரிவிலிருந்து தகுதிபெற்ற அணியுடனான ஆட்ட முடிவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

சுப்பர் 8 பிரிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

ஜுலையில் நடைபெறும் ஐ.சி.சி. கிண்ணப் போட்டிக்குப் பின்பு, 2007 உலகக்கிண்ணப் போட்டிக்கான முழு அட்டவணை வெளியிடப்படும் என்று ஐ.சி.சி. தலைமை அதிகாரி மல்கம் ஸ்பீட் தெரிவித்தார்.

ஐ.சி.சி. நேற்றுமுன்தினம் அறிவித்த பிரிவு விபரம் வருமாறு -

பிரிவு 1 - அவுஸ்ரேலியா (1), தென்னாபிரிக்கா (5), தகுதிச் சுற்றில் முதல் மற்றும் 5ஆவது இடத்தைப் பிடிக்கும் அணிகள்.

பிரிவு 2 - இலங்கை (2), இந்தியா (8), பங்களாதேஷ் (11), தகுதிச் சுற்றில் 4ஆவது இடத்தைப் பிடிக்கும் அணி.

பிரிவு 3 - நியூஸிலாந்து (3), இங்கிலாந்து (7), கென்யா (10), தரவரிசையில் 3ஆவது இடத்தைப் பிடிக்கும் அணி.

பிரிவு 4 - பாகிஸ்தான் (4), மேற்கிந்தியத் தீவுகள் (6), சிம்பாப்வே (9), தகுதிச் சுற்றில் 2ஆவது இடத்தைப் பிடிக்கும் அணி.

# சந்தர்போல் - ஹின்ட்ஸ் இரட்டைச் சதம்: மேற்கிந்தியதீவுகள் அணி 543 ஓட்டங்கள்!



(ஜோர்ஜ்டவுண்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் - ஹின்ட்ஸ் - சந்தர்போல் ஆகியோரின் இரட்டைச் சதத்துடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி 543 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

கயானாவில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டியில் முதல்நாள் ஆட்டத்தில் 3 விக்கெட் இழப்புக்கு 347 ஓட்டங்களைப் பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றுமுன்தினம் இரண்டாவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

மழை காரணமாக ஒருமணி நேரம் தாமதமாகத் தொடங்கிய போட்டியில் 188 ஓட்டங்களுடன் இருந்த வெவல் ஹின்ட்ஸும், 102 ஓட்டங்களுடன் இருந்த சந்தர்போலும் தொடர்ந்து ஆடினர்.

ஹின்ட்ஸ் அபாரமாக ஆடி இரட்டைச் சதத்தைக் கடந்தார். இந்தநிலையில், அணியின் ஸ்கோர் 390ஆக உயர்ந்தபோது, ஹின்ட்ஸ் - லாங்வெட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இவர் 297 பந்துகளில் - 34 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 213 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து சந்தர்போலுடன் ஆர்.ஓ. ஹின்ட்ஸ் இணைந்து ஆடத் தொடங்கினார். இருவரும் அபாரமாக ஓட்டங்களைக் குவித்தனர்.

அணியின் ஸ்கோர் உயர்ந்தபோதே சந்தர்போலும் - இரட்டைச் சதத்தைக் கடந்தார். ஸ்கோர் 506ஐத் தொட்டபோது, ஹின்ட்ஸ் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இதன் பின்னர், அணியின் ஸ்கோர் 543ஐ எட்டியபோது - மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

சந்தர்போல் 370 பந்துகளில் 24 பவுண்டரிகளுடன் 203 ஓட்டங்களையும், டியோ நரைன் 15 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

நெல் -3, லாங்வெட் -1, போயே -1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தில் சந்தர்போல் முதன்முறையாக இரட்டைச் சதமடித்துள்ளார். அதேவேளை, ஹின்ட்ஸ்



அடித்த 213 ஓட்டங்களே தென்னாபிரிக்காவுக்கு எதிராக மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக தனிநபர் பெற்ற அதிக ஓட்டங்களாவும் சாதனை படைத்தது.

5 விக்கெட் இழப்புக்கு 543 ஓட்டங்களுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி டிக்ளேர் செய்தபின்னர், ஒரு ஓவரில் மட்டும் விளையாடிய தென்னாபிரிக்க அணி 2 ஓட்டங்களைப் பெற்றநிலையில், போதிய வெளிச்சமின்மையால் முன்கூட்டியே ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

# தீவக அபிவிருத்தி குறித்த மாநாடு அரசியற்துறை ஏற்பாட்டில் நடைபெற்றது

## திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்பு

(நெடுந்தீவு)

தீவக அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், தற்போது நிறைவேற்றப் படவேண்டிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில், தீவக கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில்- தமிழீழ தேசியக்கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, யாழ். மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அபிவிருத்திக் கலந்துரையாடலின்போது - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சிவநேசன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும், யாழ்.மாவட்ட செயலகப் பிரதிநிதியாக நியாப் திட்டப் பணிப்பாளர் பாலகிருஷ்ணன், யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மற்றும் தீவக அரசியற்துறைப் பொறுப்பாளர்களும், யாழ். மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது அமைப்பு பிரதிநிதிகள், அதிபர்கள் என சுமார் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடல் தொடர்பான விளக்கவுரைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சிவநேசன் மற்றும் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் ஆற்றினர்.

இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு, காரைநகர், மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய -

குடிநீர், சுகாதாரம், மருத்துவம், கடல், தரைவழி தொடர்பான போக்குவரத்து, வீதி, கல்வி, துறைமுக அபிவிருத்தி, தபால், தொலைத்தொடர்பு ஆகியன தொடர்பாக தனித்தனியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன்வைக்கப்பட்டு, அவை தொடர்பாக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப் பட்டது.

இந்த அபிவிருத்தித் திட்டக் கலந்துரையாடலை தீவக கோட்ட அரசியற் துறையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

(113)

# இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்து

நல்லூர் பிரதேச சபை பிரிவில் இதுவரை துவிச்சக்கர வண்டிகளுக்கான இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் - அலுவலக நாட்களில் நல்லூர் பிரதேச சபை உப அலுவலகம், கொக்குவில் உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளும்படி நல்லூர் பிரதேச சபையினர் கேட்டுள்ளனர்.

(63)

# திருநெல்வேலியில் நாய்களுக்கு தோல்நோய்

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களும், வளர்ப்பு நாய்களும் ஒருவகை தோல் நோயுடன் வீதிகளில் அலைந்து திரிவதால், பாதசாரிகள் மற்றும் வாகனங்களில் செல்பவர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தவகை தோல் நோயுடன் வீதிகளில் திரியும் நாய்களால் சூழலுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தவகை நாய்களை உரிய முறையில் அழிக்க, சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

(63)

# 1 1/2 நாள் விடுமுறையை கட்டாயம் வழங்கவேண்டும்

## உதவி தொழில் ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாரம் ஒன்றுக்கு 45 மணித்தியாலங்கள் வேலைசெய்த ஒருவருக்கு (உணவு இடைவேளை ஒரு மணித்தியாலம் உட்பட) 1 1/2 நாட்கள் கட்டாயமாக விடுமுறை வழங்கவேண்டும் என்பது தொழிற்சட்ட நியதியாகும் என யாழ்.மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நியதிக்கு மாறாக, வணிகர் கழகத்துக்குக் கீழ் இயங்குகின்ற வர்த்தக ஸ்தாபனங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கடைகளைப் பூட்டி, ஏனைய நாட்களில் கடைகளைத் திறக்கின்றன. இதனால் தொழிலாளர்களின் நலன்கள் மீறப்படுவதுடன், அவர்கள் பல இன்னல்களுக்கும் உட்படுகின்றனர்.

இது சம்பந்தமாக பெருந்தொகையான தொழிலாளர்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு வார இறுதி விடுமுறை நாட்கள் (1 1/2) போயா மற்றும் வர்த்தக விடுமுறை நாட்களில் கடையை மூடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, 14 நாட்களுக்குள் தனக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று யாழ். மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் - வணிகர் கழகத்திடம் கேட்டுள்ளார்.

## உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்

# ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கென எழுதுவினைஞர் மற்றும் பதிவாளர் போன்றோர் இல்லாத காரணத்தால் - அங்கு கல்வி கற்று வெளியேறிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மற்றும் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்கள் தமது பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதில் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இங்கு நிரந்தரமான எழுதுவினைஞர்களோ அல்லது பதிவாளரோ இதுவரை நியமிக்கப்படவில்லை. இங்கு கல்விகற்கும் மாணவர்களே இந்த எழுதுவினைஞர்களுக்குரிய வேலைகளையும் செய்துவருவதால், இவர்களுக்கு நாளொன்றுக்கு 75 ரூபா வழங்கப்பட்டுவருகிறது.

எனவே, இதற்கு உரியதரப்பினர்-கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்து வெளியேறும் மாணவர்கள் தமது சான்றிதழ்களை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.

(29)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை சிறந்த பிரதேச சபையாக தெரிவு



விருதுபெறும் வவுனியா நகர சபை விசேட ஆணையாளர்



விருதுபெறும் வலி.தெற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர்



விருதுபெறும் மட்டக்களப்பு விசேட ஆணையாளர்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சபை நடத்திய உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான போட்டியில் மிகச் சிறந்த பிரதேச சபையாக - வலிகாமம் தெற்கு பிரதேச சபை தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

மாகாண உள்ளூராட்சித்திணைக்களம் கடந்த ஆண்டில் மிகச் சிறந்த மாநகர, நகர, பிரதேச சபைகளைத் தெரிவு செய்வதற்கான போட்டியை நடத்தியது.

இந்தப் போட்டியில் 3 மாநகர சபைகள், 7 நகர சபைகள், 61 பிரதேச சபைகள் அடங்கலாக 71 உள்ளூராட்சி சபைகள் பங்குகொண்டன.

இந்தப் போட்டியில் பரிசு பெற்ற சபைகளுக்கான பரிசளிப்பு திருகோணமலையில் இடம்பெற்றபோது - ஆளுனர் ரிரோன் பெர்னாண்டோ வெற்றிபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான கேடயங்களை வழங்கினார்.

சிறந்த மாநகர சபையாக மட்டக்களப்பு மாநகர சபையும் -

சிறந்த நகர சபையாக வவுனியா நகர சபையும் -

சிறந்த பிரதேச சபையாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் தெரிவுசெய்யப்பட்டன.

# தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களின் நன்மைகருதி நடமாடும் சேவைகள்

(நல்லூர்)

தேசிய அடையாள அட்டை இதுவரை பெறாதவர்கள், விண்ணப்பிக்காதவர்கள், தொலைத்தவர்கள், விண்ணப்பிப்பதற்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைத் தொலைத்தவர்கள், தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் முறைகள் தெரியாமல் இருப்பவர்கள் அனைவரினதும் நன்மைகருதி - நல்லூர் பிரதேச செயலக பிரிவினர் நாளை மறுதினம் முதல், 21 ஆம் திகதிவரை காலை 10 மணிமுதல் நண்பகல் 2 மணிவரை கீழ்க்காணும் முகவரியில் நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் செவ்வாயன்று அரியாலைப்பகுதி கிராம அலுவலர் பிரிவுகளுக்கு அரியாலை உப அலுவலகத்திலும் -

7 ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூர்ப் பகுதி கிராம அலுவலர் பிரிவுகளுக்கு சங்கிலியன் மண்டபத்திலும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வண்ணார்பண்ணை கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஜே/98 கிராம அலுவலர் பணிமனையிலும் -

9 ஆம் திகதி சனிக்கிழமையன்று திருநெல்வேலிப்பகுதி கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஜே/114 கிராம அலுவலர் பணிமனையிலும், 11 ஆம் திகதி திங்கட்கிழமை கந்தர்மடம் பகுதி கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஜே/105 கிராம அலுவலர் பணிமனையிலும் -

18 ஆம் திகதி கோண்டாவில்பகுதி கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஜே/118 கிராம அலுவலர் பணிமனையிலும் -

19 ஆம் திகதி கொக்குவில் கிழக்கு பகுதி கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையத்திலும், 21 ஆம் திகதி கொக்குவில் மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஜே/127 கிராம அலுவலர் பணிமனையிலும் -

நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகளால் பதிவுகள், ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. ஆகவே, அடையாள அட்டை இல்லாதவர்கள், தொலைத்தவர்கள், பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பயன்படுத்திக்கொள்ளுமாறும் -

தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்களுக்கும், பொலிஸ் அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(63)

# மேஜர் மூத்தவன், கப்டன் மணியரசன் ஆகியோரின் நினைவுக் கற்கள் கோப்பாயில் திரைநீக்கம்!

(அச்சுவேலி)

நுணாவில் பகுதியில் 17.03.2000 அன்று இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் மூத்தவன் (கிருஷ்ணன் கிருபாகரன் - அச்சுவேலி), இத்தாவில் பகுதியில் கடந்த 1.4.2000 அன்று இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் மணியரசன் (சிவம் சிவமயம் -அச்சுவேலி) ஆகிய இரு மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டமும், நினைவுக்கல் திரைநீக்கமும் நேற்றுமுன்தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது.

இரு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு அச்சுவேலி நாவற்காடு கலா சனசமூக நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டு, வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

பொதுச் சுடரை மாவீரர்களின் பெற்றோர் ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தனர்.

நினைவுச் சுடரை அச்சுவேலி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் குபேரன், கோப்பாய் பிரதேச துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் கலையரசன், முல்லை மாவட்ட மகளிர் அரசியற்துறை நிர்வாகப் பொறுப்பாளர் முல்லை, கிராம அலுவலர்களான கணேசலிங்கம், யோகராஜன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் பாலசுப்பிரமணியம், யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, கோப்பாய் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் கிரி ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்தி மக்களின் அஞ்சலிக்காக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துவரப்பட்டு, அங்கு இரு மாவீரர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

(63)

# திருத்தப்படாத வீதியால் போக்குவரத்து சிரமம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட இருபாலை கிழக்கு சி.சி.த.க. பாடசாலை வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக உள்ளதால், பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும், அந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்களும் பெரும் சிரமங்கள்ளை எதிர்நோக்குகின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் மாணவர்களின் நன்மைகருதி, குறித்த வீதியைப் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(63)




# இது உபதேசமல்ல



அன்டி பிளிக்நெட் வருக வருக

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் லாறா உட்பட அந்த அணியின் முன்னணி வீரர்கள் 7 பேர் கேபிள் அன்ட் வயர்லெஸ் நிறுவனத்துடனும். மேற்கிந்திய கிரிக்கெட் சபை டிஜிசெல் நிறுவனத்துடனும் செய்துகொண்ட வர்த்தக விளம்பர ஒப்பந்தங்கள். சர்ச்சைகளை உருவாக்கி. அந்த வீரர்களை அணியிலிருந்து நீக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.


ஒருவர் பிரபல்யமாக வரும்வேளை - அவரை வைத்து விளம்பர நிறுவனங்கள். தமது பொருட்களை விளம்பரப்படுத்துவதென்பது இயற்கையானது. இதில் லாறா உட்பட ஆறு வீரர்களும் விதிவிலக்கல்ல. எனினும் இந்த வீரர்கள் தாம் பிரபல்யமடையக் காரணமாக இருந்தவர்களை மறந்து செயற்படுவதுதான் வேதனைக்குரியது.

லாறாவிற்கு தற்போது 35 வயதாகிவிட்டது. இவர் அடுத்த உலகக் கிண்ணத்துடன் ஓய்வுபெற்று விடுவார். எனினும் சர்வதேச துடுப்பாட்ட வீரர்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு போனால், லாறாவின் பெயரைத் தவிர்க்க இயலாதபடி அவரது பெயரை விடமுடியாது. இப்படிப்பட்ட லாறா விளம்பர ஒப்பந்தங்களில் சிக்குப் பட்டு. அணியிலிருந்து நீக்கப்படுவதானது அவரது நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு வீரன் அணிக்காகவே விளையாட வேண்டுமே தவிர. அவருக்காக அணி விளையாட முடியாது. விளம்பர ஒப்பந்தங்களை வீரர்கள் செய்யும் போது. தமது சொந்த நலனைத்தான் கவனிக்கிறார்களே தவிர. அணியைப் பற்றியோ. அணியின் நிர்வாகத்தைப் பற்றியோ ஏன் கவனத்தில் எடுக்கின்றார்களில்லை?

இவ்வாறுதான் சிம்பாப்வே அணியின் முன் னாள் வீரர் ஹீத் ஸ்ரீக்கும் அவருடன் சேர்ந்த குறிப்பிட்ட சில வெள்ளையின வீரர்களும். சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகத்து டன் ஏற்பட்ட பிரச்சினையை அடுத்து அணியிலிருந்து வெளியேறியதுடன். தமக்காக ஐ.சி.சி.மற்றும் சர்வதேச வீரர்கள் குரல் கொடுக்க வேண்டுமெனவும் கோரினர்.

இவர்களின் கோரிக்கை சில நாட்கள் பரபரப்பாக இருந்தாலும். பின்னர் அடங்கி விட்டது. இவர்களும் கிளப் அணிகளில் ஒப்பந்தம் செய்து விளையாடி வந்தனர். இந்த நிலையில் அவர்களது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை அஸ்தமனமாகி விடுமோ என்ற சந்தேகமும் நிலவியது.




பிறைன் லாறா கண்பட்டுப் போனதைய்யா

எனினும் அணியிலிருந்து விலகிய ஹீத் ஸ்ரீக் மற்றும் பிளிக்நெட் ஆகியோர் தமது 2 வருட விலகலுக்குப் பின்னர். எவ்வித கோரிக்கையையும் முன்வைக்காமல் தற்போது அணியில் இணைந்து விளையாடி வருகின்றனர். இவர்கள் அணியிலிருந்து விலகியது இவர்களுக்கே நட்டமொழிய அணிக்கல்ல என்பது நிருபணமாகியுள்ளது. இதுபோலவே லாறாவும். தான் அணியில் இணைவதென்றால் தன்னுடன் நீக்கப்பட்ட மற்றைய வீரர்களும் சேர்க்கப்பட வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளார். இதுபோலவே ஹீத் ஸ்ரீக்கும் நிபந்தனை விதித்து. இறுதியில் அனைவரையும் விட்டு விட்டு தனிய வந்து இணைந்தார்.

எனவே. சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற லாறா. கிரிக்கெட் உலகிலிருந்து தான் விடைபெறும் காலம் நெருங்கிவரும் நேரத்தில் இவ்வாறான சொற்ப சலுகைக்காக தனது புகழை மழுங்கடிக்காமல் செயற்படவேண்டும் என்பதே அவரது ரசிகர்கள் உட்பட அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. அதனை லாறா நிறைவேற்றுவார்ரா?

- யசோ.

# மலை சாய்ந்து போனால்...



கங்கூலி தடுமாறும் தலைமை

பெங்களூர் டெஸ்டில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்ததன் மூலம், இந்தியா சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலில் இரண்டாமிடத்துக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது. பெங்களூரில் பாகிஸ்தான் வெற்றி பெறுவது இது இரண்டாவது முறை. ஏற்கனவே 1986/87 காலப் பகுதியில் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் அணி, இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியிருந்தது.

சென்னை, கொல்கத்தா, ஜெய்ப்பூர், அகமதாபாத் ஆகிய இடங்களில் நடைபெற்ற முதல் நான்கு டெஸ்ட் போட்டிகளையும் சம நிலையில் முடித்த இரு அணிகளும், தொடரை நிர்ணயிக்கும் இறுதி டெஸ்ட் போட்டிக்காக பெங்களூரில் களமிறங்கின. இறுதியில் பாகிஸ்தான் 16 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது. இந்தப்போட்டியில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், சுனில் கவாஸ்கர் விளையாடிய கடைசி டெஸ்ட் போட்டி இதுவாகும். ஆனாலும் பரிதாபகரமாக அவர் 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இந்தியா தோல்வியடைந்தது.

மீண்டும் இப்போது இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி பெங்களூரில் இந்தியாவைத் தோற்கடித்து டெஸ்ட் தொடரைச் சமன்செய்தது.

இந்தத் தொடரில்புதுமுகவீரர்களான கௌதம் கம்பீர், தினேஸ் கார்த்திக் போன்றவர்கள் கூட ஒரு அரைச்சதமாவது அடித்து தங்கள் இடத்தை ஓரளவுக்கேனும் உறுதி செய்துள்ளனர். ஆனால் அணித்தலைவர் கங்கூலியின் 5இனிங்ஸ்களையும் சேர்த்தால் கூட அரைச்சதம் வராது. இந்தத் தொடரின் 5 இனிங்ஸ்களிலும் மொத்தம் 48 ஓட்டங்களையே அவர் எடுத்திருக்கிறார். இதற்கு முன் அவர் விளையாடிய தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய, பங்களாதேஷ் தொடரிலும் அவரின் துடுப்பாட்டம் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை

கங்கூலியின் தலைமையில் இந்திய அணி சாதனைபடைத்தது என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. ஆனால் இப்போது தொடர்ந்து மோசமாக விளையாடி வரும் அவரால் அணிக்கு எந்தவித பயனுமில்லை என்பதையும் ஏற் றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்திய அணி சார்பில் அதிக டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கியவர்கள் மொகமட் அஸாருதீனும், சுனில் கவாஸ்கரும். இவர்கள் இருவரும் தலா 47 டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ளனர். பெங்களூர் டெஸ்ட் போட்டி கங்கூலியின் தலைமைக்கு 47ஆவது போட்டியாகும்.

இதன்மூலம் அவர்களின் சாதனையை கங்கூலி சமப்படுத்தியுள்ளார். இதில் அஸாருதீன் 14 வெற்றிகளையும் கவாஸ்கர் 8 வெற்றிகளையும் பெற்றுக்கொடுக்க, கங்கூலியோ 19 டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்திருக்கிறார். இது அவரின் தலைமைப் பதவியின் ஆளுமையையே எடுத்துக்காட்டுகிறது.

ஆனாலும் இந்த 19 டெஸ்ட் வெற்றிகளிலும் இவரின் பங்களிப்பு எவ்வளவு என்று பார்க்கும் போது அது சொற்ப அளவுதான்.

2002ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஹெடிங்லி மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 128 ஓட்டங்களைக் குவித்ததும், 2001ஆம் ஆண்டு கண்டியில் நடை பெற்ற டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் பெற்ற 98 ஓட்டங்களுமே கப்டன் பதவியில் இவர் பெற்ற அதிசிறந்த ஓட்டங்களாகும்.

அத்தோடு கடைசியாக 2003 டிசெம்பரில் அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேனில் பெற்ற சதத்திற்கு பின்னர், இதுவரை எந்தவிதமானபிரமாண்டமான ஓட்டக்குவிப்பிலும் அவர் ஈடுபடவில்லை. மொகமட் கைவ், யுவராஜ்சிங் போன்றவர்கள் தமது திறமைகளை புடம் போட்டு, அணியில் இடம் பிடிப்பதற்கு தவித்து கொண்டிருக்கும் பொழுது, கங்கூலியின் இந்த நிலையை உணர்ந்து அணித்தேர்வாளர்கள் -அவர்களில் ஒருவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முன் வருவார்களா?



இந்திய அணித் தேர்வாளர்கள் உன்முடிவு எம் கையில்

அல்லது வழமை போல் கப்டன்பதவியிலிருந்து கங்கூலியைத்தூக்கவேண்டுமெனவும், வழமைபோல் அதை ராவிட்டுக்கு கொடுக்க வேண்டுமெனவும் ஊடகங்கள் கருத்துவெளியிட, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையும் ஒரு தொடரை மட்டும் கணக்கிலெடுத்துக் கொண்டு அவரைப் பதவியிலிருந்து விலக்க முடியாதென்று வழமைபோல் கூறினாலும் அது ஆச்சரியப்படத்தக்க விடயமேயல்ல. ஏனென்றால் கங்கூலி விடயத்தில் இவ்வாறு காலம் கடத்தும் பழக்கம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு வழக்கமான ஒன்றாகி விட்டது.

- விமலன்.

# காற்றினிலே வரும் காதல்

பாகிஸ்தான் இளம் தலைமுறைக் கிரிக்கெட் நட்சத்திரங்களில் ஒருவர் இருபத்து மூன்றே வயதான சொஹெய்ப் மாலிக். இவர் தற்போது இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் ஒருவர். ஆனால், இவரது சுழற் பந்து வீச்சு (Off spin) முறையில் பிழை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து சில தொடர்களை இவர் இழந்துவிட்டார். தற்போது இவர் மீதிருந்த தடை நீக்கப்பட்ட நிலையில், ஒருநாள் தொடரில் தனக்கு நிச்சயம் இடம் கிடைக்கும் என்று நம்புகிறார்.

முன்னதாக முரளிதரன் தமிழ் நாட்டில் தன் மணமகளைத் தேர்ந்தெடுத்தார். இதற்கு முன்னதாகவே சொஹெய்ப் மாலிக் தன் மனைவியை இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் இருந்து இரண்டு வருடங்களுக்கு முன்பே தேர்வு செய்துவிட்டார்.

இவரது காதல் கதை துபாய் நாட்டில் ஒரு சந்திப்பில் மலர்ந்து, ரெலிபோனில் வளர்ந்து, ரெலிபோனிலே "நிக்காஹ்" (திருமணம்) நிகழ்வும் முடிந்து விட்டது என்கிறார் இவர். இவருக்கு மனைவியாகப் போகிறவர் தற்போது பல் மருத்துவத்துறையில் ஜெட்டா (சவூதி அரேபியா) பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளார்.



சொஹெய்ப் மாலிக் ரெலிபோன் மணிபோல் சிரித்தவள் அவளா?

கிரிக்கெட் பற்றிப் பேசும்போது வெறுமனே உட்கார்ந்திருப்பது அலுப்பாக இருக்கிறது. நான் கிரிக்கெட் ஆடவே இந்தியா வந்தேன். சிறந்த வகையில் கிரிக்கெட் ஆடி, என் திறமையை நிருபிக்க விரும்புகிறேன் என்கிறார். ஒருநாள் ஆட்டத்தில் இவர் சேர்க்கப்படும் பட்சத்தில், அதிரடி துடுப்பாட்ட வீரராகவே உள்வாங்கப்படக் கூடும் என்று நம்பப்படுகிறது. இவரது கிரிக்கெட் ஆட்டம் மற்றும் திருமண வாழ்வு இரண்டுமே சிறந்து விளங்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இதை அடுத்து எந்த நாட்டு கிரிக்கெட் வீரர் இந்தியாவில் பெண் எடுக்கப்போகிறார்?

- அன்ரனி.

# பிள்ளைகளை விட்டு விடுங்கள்



பெக்கம் - விக்டோரியா
இனியும் பொறுக்கமாட்டோம்

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணித் தலைவர் டேவிட் பெக்கம். இவர் ஸ்பானிய நாட்டின் றியல் மட்ரிட் உதைபந்தாட்டக் கழகத்தின் முக்கிய உறுப்பினர். மேலும் டேவிட் பெக்கம் தன் திறமை, தோற்றம் என்பவற்றால் லட்சக்கணக்கான ரசிகர்களை வரித்துக் கொண்டவர். இதற்கும் மேலாக இவரது மனைவி விக்டோரியா ஒரு பிரபல்யமான பாடகியும் கூட. இதுவும் பெக்கத்தின் பிரபல்யத்துக்கு ஒரு காரணம். இந்நிலையில் எல்லோரது அவதானமும் இவர்கள் மீது குவிவது ஒன்றும் ஆச்சரியம் அல்ல.

ஆனால், சிலவேளைகளில் பிரபல்யம் என்பது உபத்திரமாகவும் மாறி விடுவதுண்டு. இப்போது பெக்கத்தின் பிரச்சினையும் இதுதான். ஸ்பானியாவில் தற்போது தங்கி இருக்கும் டேவிட் பெக்கத்தின் பிள்ளைகளுக்கு Paparaizi களால் பெருந்தொல்லையாக இருப்பதாக இவர் புகார் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே றியல் மட்ரிட் அணியை விட்டு தான் விலகி, மீண்டும் இங்கிலாந்துக்குச் சென்றுவிட யோசித்திருப்பதாக அவர் கூறுகிறார்.

என்னையோ, என் மனைவியையோ இந்தப் புகைப்படக்காரர்கள் இலக்கு வைப்பது ஓரளவில் ஏற்றுக்கொள்ளக்கூடியதும். சகித்துக்கொள்ளக்கூடியதும் தான். ஆனால், எனது பிள்ளைகளில் இருவர் பத்திரிகையாளர்களால் இலக்கு வைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அவர்கள் ஆரம்ப மற்றும் முன்பள்ளி செல்லவும் முடிவதில்லை.

உதைபந்தாட்டப் பயிற்சிப் பாடசாலைக்குச் செல்லவும் முடிவதில்லை. படப்பிடிப்பாளர்கள் இவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். மூத்த பையன் புருக்லின் அவனுக்கு வயது ஆறு மட்டுமே. அவனுக்கு இளையவன் றோமியோ. இருவரையும் பின் தொடர்தல், படமெடுத்தல் என்பவற்றால் அவர்கள் விசனப்பட்டுப் போய் இருக்கிறார்கள் என்கிறார் டேவிட் பெக்கம்.



றோமியோ - புருக்லின்
யோசனையை விடுங்கப்பா

இப்படியான நிலையில் தனது பிள்ளைகள் தொந்தரவுக்கு உள்ளாகக் கூடாது என்பதால் தான், அவர் தன் வளமிக்க எதிர்காலத்துக்கு உறுதுணையாக இருக்கும் றியல் மட்ரிட் அணியை விட்டு விலகி, தாயகம் செல்லும் எண்ணங்களைக் கொண்டுள்ளார் போலத் தெரிகிறது.

இந்தப் படப்பிடிப்பாளர்கள் டேவிட் பெக்கத்தின் குமுறலை உணர்ந்து விலகிக் கொண்டால் அவருக்கு மகிழ்ச்சி. பிள்ளைகளுக்கும் நிம்மதி. எவ்வளவு தான் பணம், பெருமை, பிரபல்யம் எல்லாம் இருந்தாலும் நிம்மதி என்ற ஒன்று இல்லாவிட்டால், எதிலுமே அர்த்தமில்லைத் தான்.

- ஜோசப் கிருஷ்ணா

# பலதும் பத்தும்



டேவிட் ஷெப்பட்
நின்ற நிலையில் சதம்

ஸ்ரீவ் பக்னருக்கு நூறாவது டெஸ்ட் அபஸ்வரமாகிப்போனது துயரம் தான். இருந்தாலும் அதற்குப் பொறுப்பும் அவரே. இது ஒருபுறம் இருக்க ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய ஆட்டங்களில் மத்தியஸ்தம் வகித்தவர் என்ற பெருமையைப் பெற்றுக் கொள்பவர் இங்கிலாந்தின் டேவிட் ஷெப்பட் தான்.

இவர் டெஸ்ட் போட்டிகள் என்று பார்த்தால், எண்பத்தாறு போட்டிகளில் மட்டுமே இதுவரை கடமையாற்றியுள்ளார். ஆனால், ஒருநாள் போட்டிகளில் நூற்று அறுபத்தைந்து ஆட்டங்களில் மத்தியஸ்தம் வகித்திருக்கிறார் டேவிட் ஷெப்பட். இவருக்கு அடுத்ததாக வெகுவாகப் பின்னால் ரூடி கோட்சன். இவரது எண்ணிக்கை நூற்றுமுப்பத்திரண்டு. ஸ்ரீவ் பக்னரின் கணக்கில் 131 ஆட்டங்கள் மட்டுமே இருக்கின்றன. இவர்கள் மூவரும் இன்னும் களத்திலேயே நிற்பதால் இந்தத் தரவுகள் வாரத்திற்கு வாரம் மாறிக்கொண்டே இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் எந்தப் பந்து வீச்சாளராவது நூறு விக்கெட்டுக்கள் வீழ்த்தியிருக்கிறார்களா என்றால் இலகுவாகவே இல்லை என்று கூறிவிடலாம். ஆக அறுபத்தொன்பது விக்கெட்டுகள் வீழ்த்தியதுதான் இதுவரை சாதனையாகக் கொள்ளப்படுகிறது. 1997ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சாக்லெய்ன் முஷ்டாக் வீழ்த்திய 69 விக்கெட்டுகள் தான் சாதனையாக இருக்கின்றன. இதில் என்ன விஷேடமென்றால், 1996 இல் 65 விக்கெட்டுகளை இவர் வீழ்த்தி இருந்தார். அதனை 1997 இல் இவரே முறியடித்தார். இதற்கடுத்து 1999இல் ஷேன் வோன் வீழ்த்திய 62 விக்கெட்டுக்கள் பதியப்பட்டிருக்கிறது. அடுத்து பாகிஸ்தானின் அப்துல் ரஷாக் (2000), தென்னாபிரிக்காவின் ஷோன் பொலக் (2000) இந்தியாவின் அனில் கும்ளே (1996) ஆம் ஆண்டுகளில் 61 விக்கெட்டுக்கள் வீழ்த்தியிருக்கிறார்கள். இப்போதுள்ள நிலையில் நூறு விக்கெட் எனும் சாதனை அண்மைக் காலத்தில் யாராவது ஒரு சுழற்பந்து வீச்சாளருக்கு வாய்க்கும் என்ற கருத்து பரவலாகப் பேசப்படுகிறது.



டனேஸ் கனேரியா
மாங்கலம் பொங்கட்டும்

சிறப்பாக இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் போட்டிகளைப் பார்த்தவர்கள் கும்ளே, டனேஸ் கனேரியா போன்றவர்களின் பந்துச் சுழற்சியைப் பார்த்து பிரமித்துப் போயிருப்பார்கள். அதோடு சுழற்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு முறைமைகள் பற்றிய சர்ச்சைகளுக்கு ICC முற்றுப் புள்ளி வைத்ததும், இலக்கு வீழ்த்தலில் சதம் போடும் சாதனையை சுழற்பந்து வீச்சாளர்கள் விரைவில் எட்டுவார்கள் என்பதற்கு ஒரு காரணமுமாகும்.


- நிர்மலன்

# கடிகாரமுன் ஓடு முன் ஓடு




போல் ரெர்கட்
எல்லையென்பதில்லை

எதியோப்பியாவின் ஜெப்ரசெலாசி லண்டன் மரதன் தனக்குத்தான் என்று தைரியமாக எதிர்வுகூறிக் கொண்டிருக்கும் வேளையில், அதற்குச் சவால் விடுவதுபோல கென்யாவின் போல் ரெர்கட் போர்த்துக்கல் லிஸ்பன் HALF MARATHON ஓட்டத்தில் அபார வெற்றியைப் பெற்றுள்ளார். தற்போதைக்கு மரதன் ஓட்டப் போட்டிகளில் உலகசாதனை நேரத்தைக் கொண்டிருப்பவர் இவர்தான். HALF MARATHON பொறுத்து இவர் எடுத்துக்கொண்ட நேரம் 59 நிமிடங்கள். 2002 ஆம் ஆண்டு லண்டன் மரதன் ஓட்டப் போட்டிகளின்போது முதலிடம் பெற்றவர் காலிட் கனுச்சி. இந்த ஓட்டப்போட்டியில் இரண்டாம் இடம் பெற்றவர்போல் ரெர்கட். எனவே லண்டன் மரதன் போட்டிக்கான ஒரு பயிற்சி ஓட்டம்தான் இது என்கிறார்கள் விமர்சகர்கள். இதன்படி பார்க்கையில் இவரது திறமையை நன்கு மதிப்பிட்டுள்ள விமர்சகர்களின் கண்ணோட்டத்தின்படி இந்தவருட லண்டன் மரதன் சம்பியன் பட்டம் பெறப் பேகிறவர் இவர் தான். பொறுத்திருந்துதான் பார்ப்போமே.




சுஸான் செப்கெமி
ஓடுவதில் ஒருசுகம்

இன்னொருபுறம் மகளிர் பிரிவில் வெற்றிபெற்றவரும், கென்ய நாட்டைச் சேர்ந்தவரே. அவரது பெயர் சுஸான் செப்கெமி. இவரது வெற்றியில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. இந்த இருப்த்தொன்பது வயது மங்கை ஒழுங்காகப் பயிற்சிக்குச் சமுகமளிக்கவில்லை என்பதற்காக, கென்ய தடகள சங்கத்தினால் ஒரு வருடகாலம் எந்தவித போட்டிகளிலும் கலந்துகொள்ளக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டு, பின் ஏதோ கருணையில் தடைவிலக்கப்பட்டவர்.

இவர் இப்போது போர்த்துக்கல் – லிஸ்பன் மரதனில் முதல் இடம் பெற்று அசத்தியிருக்கிறார். இவர் திறமைசாலியாக இருந்தாலும் உரிய நேரத்தில், உரிய பயிற்சிகளுக்குப் போகாமல்விடுவது தண்டனைக்குரிய குற்றமே. ஏதோ தப்பிவிட்டார். எனவே எதிர்காலத்தில் காலச் சக்கரத்துடன் சேர்ந்து ஓடி பதக்கங்கள் பல வெல்லட்டும் இந்த அம்மையார்.

- மக்டலின்

விளையாட்டு அரங்கம்


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# தமிழ் மக்களை ஒரே குடையின்கீழ் கொண்டுவர முயற்சித்தவர் தந்தைசெல்வா!

## பங்குத் தந்தை யூட் சுதர்சன் அடிகளார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மற்றும் மலையக மக்கள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்தவர் தந்தை செல்வா பல சீர்திருத்தங்களை தனது காலத்தில் நிலைநாட்டியதாக, உடுவில் தென்னிந்திய திருச்சபை பங்குத் தந்தை வண. யூட் சுதர்சன் அடிகள் தெரிவித் தார்.

தந்தை செல்வாவின் 107 ஆவது பிறந்ததின நினைவு தினத்தை முன்னிட்டு, வவுனியா குடியிருப்பு புனித பேதுரு ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடந்த விசேட ஆராதனையை அடுத்து, நடைபெற்ற சிறப்புப் பேருரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காலனித்துவ ஆதிக்க காலத்தில் தமிழ்த்தேசிய உணர்வைத் தட்டி யெழுப்பியவர். மனித நேயமும், ஆளுமைப் பண்பும் தந்தை செல்வாவிடம் காணப்பட்டது. பல தியாகங்களை மேற்கொண்டு தமிழ் மக்களுடைய உரிமையை வென்றெடுக்கவேண்டும் எனப் போராடினார். இவருக்கு பல உயர் பதவிகளை அன்றைய ஆட்சியாளர்கள் வழங்கி, அவரை அடிபணிய வைத்த போதிலும் அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு தமிழ் மக்களின் விடுதலையே குறிக்கோள் என்ற உணர்வுடன் செயற்பட்டார்.

மேலும், சமயரீதியாக ஒரு தலைசிறந்த கிறிஸ்தவனாகவும், கலாசாரரீதியாக இந்துவாகவும் இவர் திகழ்ந்தவர். ஆன்மீகவாதியாகவும், அரசியல்வாதியாகவும் விளங்கினார். தமிழ்த் தேசியவாதத்தை வளர்க்க வேண்டும் - உணர்வை ஊட்ட வேண்டும் என்பதற்காக தனது சட்டத்தரணி தொழில் மூலம் பெற்ற பணத்தைக்கொண்டு சுதந்திரன் பத்திரிகையை ஆரம்பித்தார்.

அரசியல்வாதிகள் பல நடிப்புகளை மேற்கொள்வது வழக்கம். ஆனால் இவர் மக்கள் முன் நடிக்கவில்லை. தனது வாழ்வில் ஆத்மீகமும், அரசியலும் இரு துருவங்கள் என்ற அடிப்படையில் செயற்பட்டார்.

தமிழ்த்தேசிய உணர்வை மக்கள் மத்தியில் பரப்பியதுடன், மலையக மக்களுடைய வாக்குரிமையை இலங்கை அரசு பறித்தபோது கொதித்து எழுந்தார்.

எங்களுடைய மொழி உரிமையில் அரசு கைவைக்கும் என்று அவர் கூறிய தீர்க்கதரிசனத்தின்படியே, சிங்கள சட்டத்தை அமுலாக்கியது இலங்கை அரசு. இவற்றையெல்லாம் அவர் எதிர்த்துப் போராடினார்.

சட்டத்தரணியாக இருந்த இவர்-தான் ஒரு நீதிபதியாக வரவேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்தார். ஆனாலும் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தில் தனது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். இவரைப் போன்றதொரு அரசியல்வாதியை காண்பது அரிது.

தமிழ்த்தேசிய இனம் என்ற கோட்பாட்டையும், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடைய தாயகம் என்பதையும் முன்வைத்தவர் இவரே. தமிழர்கள் தமது மொழி மீதும், மண்மீதும் பற்று வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தவர். தமிழர்களுடைய பலம்தான் அவர்களுடைய தாயகம், மொழி உணர்வு என்ற விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியவர். தமிழ் மக்களுக்கு ஒரு வரலாற்றை விட்டுச் சென்றுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.என்.ஜி. நாதன், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் என்.சேனாதிராசா, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வன்னி மாவட்ட தலைவர் கே.ஏ.செந்தில்நாதன், வன்னி மாவட்ட தந்தை செல்வா அறங்காவலர் குழுத் தலைவர் கே.சீனிவாசகம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர்களான வி.திருவிளங்கம், ஆர். கிறிஸ்தோபர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஏப்ரல் - 03**

கி.பி 33 : இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு இறந்த நாள் இது தான் என்று ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பேராசிரியர் இருவர் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

1860 : குதிரைச் சவாரி மூலம் தொலை தூரத்துக்கு தபால் விநியோகம் நடைமுறை முதன்முதலாக அமெரிக்காவில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

1899 : நடமாடும் தபால் நிலையம் கரோல் கவுண்டில் தொடங்கப்பட்டது.

1966 : சந்திரனின் சுற்று வட்டப்பாதையில் முதன் முதலாக லூனா - 10 என்ற விண்கலம் சுற்றி வர ஆரம்பித்தது. இது இரண்டு மாதங்களுக்குத் தொடர்ந்து பூமிக்கு தகவல் குறிப்புக்களை அனுப்பியது.


1973 : சல்யூட் - 2 என்ற ஆளில்லாத விண்வெளி நிலையம் ஏவப்பட்டது. எனினும் ஏற்பட்டுவிட்ட ஏதோ ஒரு தவறு காரணமாக இம்மாதம் 14 ஆம் திகதி இது உடைந்து சிதறியது.

1984 : கயானா நாட்டின் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது.

* : சோயுஸ் ரி - 11 என்ற விண்கலம் இந்திய விண்வெளி வீரர் ராகேஸ் சர்மா உட்பட மூன்று விண்வெளி வீரர்களுடன் விண்ணில் செலுத்தப்பட்டது.

1985 : நடக்காத போர் ஒன்றுக்கான போர் நிறுத்த அறிவிப்பு ஒன்று 335 வருடங்களுக்குப் பிறகு செய்யப்பட்டது. சிசிலி தீவிலிருந்து இயங்கி வந்த கடல் கொள்ளைக்காரர்களைக் கைது செய்ய 1651 ஆம் ஆண்டு அட்மிரல் ட்ராம்ப் என்பவரது தலைமையிலான டச்சுப்படை அத்தீவைத் தாக்கியது. அத்தீவு மக்கள் சரணடைய மறுக்கவே , அட்மிரல் ட்ராம்ஸ் அத்தீவின் மீது போர்ப்பிரகடனம் செய்தார். இதற்கிடையே இப்பிரச்சினையில் பிரிட்டன் குறுக்கிட இந்தப் போர்ப் பிரகடனம் பற்றி அனைவருமே மறந்து விட்டனர். இருந்தும் இன்று ஓர் போர் நிறுத்த சமாதான ஒப்பந்தம் டச்சு அரசினால் அறிவிக்கப்பட்டது.

தொகுப்பு - சந்துரு







கிளிநொச்சி - ஆனந்தபுரத்தில் அமைந்துள்ள மாவீரர் பணிமனை திறப்புவிழாவில் தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ அரசியற்துறைப் மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றுவதை முதலாவது படத்திலும், பொதுச் சுடரை திருமதி பொன் தியாகம் ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் போராளிகள் அகவணக்கம் செலுத்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

- படம்: சு.பாஸ்கரன்.

# தற்போதைய மருத்துவ வசதிகளில் இருந்து தாய் இறப்பிற்கான காரணம் கூறமுடியாது

## கிளிநொச்சி மருத்துவ அதிகாரி கா. சுயந்தன்

(கிளிநொச்சி)

போர் இடம் பெற்ற காலங்களில் மருத்துவ வசதிகள் குறைந்த நிலையில் மகப்பேற்றின் போது தாய் இறப்புக்களுக்கு சாட்டுக்கள் கூறலாம். தற்போது இருக்கின்ற மருத்துவ வசதிகளின் போது தாய் இறப்பிற்கான காரணங்கள் எதையும் கூற முடியாது என, கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி கா.சுயந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சி சுகாதார பணிமனையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மாதாந்த கலந்துரையாடலில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

போர் இடம் பெற்ற காலங்களில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் பணி புரிந்தோம். அந்தப் பணியிலிருந்து பெற்ற அனுபவங்கள் ஊடாக தற்போதைய அமைதிச் சூழலிலும் மக்களுக்கான வருமுன் காப்போம் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம். போரின் காரணமாக மருத்துவ வசதிகள், பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மகப்பேற்றின் போது தாய் இறப்பதை காரணம் கூறிவந்தோம்.

தற்போது இருக்கின்ற வசதிகள் மூலம் மகப்பேற்றின் போது எந்தத் தாயும் இறக்காமல் பாதுகாக்க வேண்டிய பணி எங்கள் எல்லோருக்கும் உள்ளது.

சுகாதார நிலைமைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். கடந்த காலத்தில் மலேரியா தொடர்பாக நாம் கிளிநொச்சி மக்கள் மத்தியில் ஏற்படுத்திய விழிப்புணர்வு வெற்றியளித்துள்ளது. அதே போன்று ஏனைய டெங்கு, வயிற்றோட்டம் போன்ற பல்வேறு நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி சுகாதார பணிமனையினரால் நாளை தொடக்கம் எதிர்வரும் பத்தாம் திகதி வரையான நாட்களில் சுகாதார விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அத்துடன் கிளிநொச்சி ஆனந்த நகர் பகுதியில் டெங்கு நோயாளி ஒருவர் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, கிளிநொச்சி சுகாதார பணிமனையின் பூச்சியியல் ஆய்வுப் பிரிவினர் இந்தப்பகுதியில் ஆய்வு மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் கிளிநொச்சி சுகாதார பணிமனையினரால் எதிர்வரும் மேமாதம் சுகாதார கண்காட்சி ஒன்று கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ளது.

## கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள குமுழமுனை கிராமத்தில் - கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இல்லையென அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுமார் ஆறு ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ள இந்தக் கிராமத்தில் ஓர் மேய்ச்சல் தரை இல்லாமையால், அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் தொகையைக் கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து தமது பகுதிக்கு ஓர் மேய்ச்சல் தரையை ஒதுக்கித் தரவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (வெ)

## நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி திருநெறிக்கழகத்தின் நூல் வெளியீட்டுவிழாவும், சைவ நெறிப் போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் கழகத்தலைவர் வே.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்துகொள்ளவுள் ளார்.




## கிரவல் மண் அகழ்வால் குமுழமுனை மக்கள் விசனம்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள குமுழமுனைக் கிராமத்தை அண்டிய பகுதியில் கிரவல் மண் அகழ்வதையிட்டு இந்தக்கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்துக்கு அண்டிய பகுதியில் கிரவல் மண் எடுப்பதால், எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் குடியேறமுடியாத ஓர் சூழ்நிலை ஏற்படும் என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தக் கிராமத்தில் கிரவல் மண் எடுக்கக்கூடிய இடம் வேறு பகுதியில் உள்ளது எனவும், அந்தப் பகுதியில் கிரவல் மண் எடுக்கக்கூடிய வசதி இருந்தபோதும், தமது கிரா மத்தை அண்டிய பகுதியில் கிரவல் மண் எடுப்பதுதான் மிகவும் வேதனைக்குரிய விடயமென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (வெ)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.
திருக்குறள்

## நமது நோக்கு

### ஜனாதிபதியின் தேர்வு எதுவாக இருக்கப்போகிறது?

மீண்டும் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக கடந்த இரு மாதங்களாகவே அரசியல் வட்டாரங்களில் பரவலான பேச்சுக்களும் - ஜனாதிபதி வட்டாரங்களின் கடுமையான ஆலோசனைப் பகிர்வுகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளதை அரசியல் அறிந்தோர் அறிவர். ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி தேர்தலில் வெற்றிபெற்று ஓராண்டுநிறைவுபெற்றுள்ள நிலையில், இந்த 12 மாத காலத்திற்குள்புதிய அரசு எதனைச்சாதித்தது என்ற கேள்விக்கு பதில் "ஒன்றுமில்லை" என்றே அமையும்.

முரண்பட்ட கொள்கைகளையும், வெவ்வேறு நோக்கங்களையும், ஒருவரைஒருவர் மேலாதிக்கம் செய்ய முனைப்புறும் மனப்போக்கையும் கொண்ட கட்சிகளின் தலைமைகளை உள்ளடக்கிய ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி, ஆரம்பம் முதல் இன்றுவரை இழுபறிநிலையில், ஆக்கபூர்வமான செயற்பாடு ஏதுமின்றியே நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் - அரசியல் எதிர்காலத்திற்கு அல்லது பேரினவாதிகளின் அபிலாஷைகளுக்கு ஆபத்தானதாகிவிடும் என்ற அச்சத்தின் காரணமாக, அதனை எப்படியாவது குழப்பும் உள்நோக்குடன் அவ்வாட்சியை அரசியல் சட்டபூர்வமான "சதி" யொன்றின் மூலம் அகற்றிய ஜனாதிபதியின் ராஜதந்திர வியூகமானது, தவறான மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்ததன் காரணமாக ஏற்பட்ட எதிர்விளைவுகளை கடந்த ஓராண்டு காலத்திற்குள் மிகவும் கசப்பானதும் ஜீரணிக்கமுடியாததுமான அனுபவங்களாக எதிர்கொள்ளவேண்டியிருந்தது, அவர் எதிர்பார்க்காதஒன்றேயாகும்.

தனது நிறைவேற்று அதிகாரபலம் என்ற மகாசக்தியின் மூலம் எவரையும் - பதவிகளையும், வசதிகளையும் வழங்கி தனது கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் தலையாட்டிப்பொம்மையாக மாற்றிவிடலாம் என்ற ஜனாதிபதியின் நம்பிக்கையானது, ஜே.வி.பியினரின் விடயத்தில் தவிடுபொடியானதில் அவரது அபிலாஷைகள் அனைத்தும் சிதறுண்டுபோயிற்று.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி" என்பதுபோல் விகிதாசார பிரதிநிதித்துவம் வழங்கிய வாய்ப்பு காரணமாக வெறுமனே பத்தே பத்து உறுப்பினர்களுடன் சும்மா "வளாவளா" போராட்ட அரசியல் வியாபாரம் செய்து கொண்டிருந்த ஜே.வி.பியினரை, ஜனாதிபதியின் குறுகிய சிந்தனை கொண்ட, அரசியல் முதிர்ச்சியின்மை - இன்று அவரையே அச்சுறுத்தி, மிரட்டி ஐந்து சதத்திற்கும் பெறுமதியற்றவர் என அவமதிக்கும் பலமான நிலைக்கு உயர்த்தியது எனலாம்.

அவர் விட்ட வரலாற்றுத்தவறு இன்று அவரையே அத்தனை அதிகாரத்தை வைத்துக் கொண்டும் அசையமுடியாத நிலைக்குக் கொண்டு வந்துள்ளதெனலாம். ஒரு ஜனாதிபதி என்ற வகையில், அவரால் ஒரு துரும்பைக்கூட ஜே.வி.பியின் அனுமதியின்றி - விருப்பின்றி - ஆதரவின்றி நகர்த்தமுடியாமலிருப்பது, அவரை செயலற்றவராக முடக்கியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை தொடராவிடின் - ஏற்படக்கூடிய ஆபத்தை ஜனாதிபதி உணர்ந்திருந்தும், ஜே.வி.பியினரின் எதிர்ப்புக் காரணமாக அவரால் எதுவும் செய்யமுடியாமல் இருப்பதுடன், பொதுக்கட்டமைப்பு உட்பட மேலும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக எந்த விதமான உறுதியான முடிவுக்கும் வரமுடியாமலும் உள்ளார்.

இதன் காரணமாக சர்வதேச சமூகத்தின் அதிருப்தியையும், நம்பிக்கையீனத்தையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளதுடன், இலங்கை தொடர்பான உலகின் கணிப்பீடுகளும் வீழ்ச்சி காணத் தொடங்கியுள்ளது. இலங்கைக்கான சர்வதேச உதவிகள் கிடைப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சமாதான முயற்சிகளுக்கான சர்வதேச அழுத்தம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இவையாவும் ஜனாதிபதிக்குப் பெரும் தலைவலியையும், சிக்கலையும் உருவாக்கும் சூழலை அதிகரிப்பதாகவும் ஆகியுள்ளது.

வெறுமனே செயலற்ற அரசைப் பாதுகாக்க ஜே.வி.பியின் மிரட்டல்கள் உத்தரவுகள் எல்லாவற்றுக்கும் செவிசாய்த்து, தனது அதிகார ஆளுமை சிதைவடைய அனுமதிப்பதா? அல்லது ஜே.வி.பியினரை ஓரம் கட்டிவிட்டு அல்லது வெட்டிவிட்டு தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க மாற்றுவழிகளைத் தேடுவதா? என்பதை அவர் தீர்மானிக்கும் கட்டம் வந்துவிட்டதாகவே தெரிகிறது.

முன்னர் தனது அதிகார பலத்தைப் பயன்படுத்தி, ஐ.தே முன்னணி ஆட்சியைக் கலைத்த அவர் - அதே வழியைப் பயன்படுத்தி ஐ.ம.சு முன்னணி அரசையும் கலைத்துவிடும் முடிவுக்கு அவர் வரவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும் நிலை உருவாகியுள்ளது போல் தெரிகிறது.


ஜே.வி.பியிடமிருந்து விடுதலைபெற அதனைவிட வேறு மார்க்கம் இருப்பதாகவும் தெரியவில்லை அவருக்கு...

ஜே.வி.பியினருடன் இணைந்து நாட்டின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது என்ற உண்மை இப்போது ஜனாதிபதிக்கு உறைக்கத் தொடங்கிவிட்டது என்றேதோன்றுகிறது.

இதுதொடர்பாக அவர் ஏதாவது முடிவுக்கு வந்தாகவே வேண்டும். இல்லை - இந்தநிலையில் இந்த அரசை வைத்துக்கொண்டு அவரால் எதுவுமே செய்யமுடியாது.

அவர் என்னமுடிவு எடுக்கப் போகிறார் என்பதை வைத்தே அவரது அரசியல் மற்றும் ராஜதந்திர முயற்சியை உலகம் எடைபோடும் என்பதுமட்டும் உறுதி.

## நாடும் நடப்பும்




செய்தி: நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியையும் கூட்டணியையும் கலைக்குமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை....

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அன்று தொடங்கிய விரோத நடை இன்னும் ஓயவில்லை!

சமாதானச் செயற்பாடுகள் குறித்து மக்களுக்குச் சரியான தகவல்கள் ஊடகங்கள் மூலம் வழங்கப்படுவதில்லை. இதனால் எடுக்கவேண்டிய சரியான வழி எது என்பதைத் தீர்மானித்துக் கொள்வதற்கு அரசாங்கத்துக்குக் கடினமாக இருக்கிறது. அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால இப்படித் தெரிவித்திருப்பதைப் பார்த்தீரா என்று சொல்லியபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

சமாதானச் செயற்பாடுகள் குறித்து மக்களுக்குச் சரியான தகவல்கள் கொடுப்பது பற்றிச் சிந்திப்பது இருக்கட்டும். அரச ஊடகங்களும் சில தனியார் ஊடகங்களும் சமாதானத்துக்கு விரோதமாகச் செயற்படுதைக் கண்டிக்கவோ தடுத்து நிறுத்தவோ அதிகாரத்திலிருந்தவர்களும், அதிகாரத்திலிருப்பவர்களும், அதிகாரத்துக்கு வருவதற்குப் போட்டி போடுபவர்களும் ஏதாவது செய்திருக்கிறார்களா? என்று கேட்டேன்.

சமாதானத்தைக் குழப்பவும் சமாதானத்துக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவதற்கும் ஆட்சிபீடத்திலிருந்தவர்கள்தானே முதலில் வழிகாட்டினார்கள். இது இன்று நேற்றா தொடங்கியது. சந்திரிகா அம்மையாரின் அப்பன் பண்டாரநாயக்க காலத்தில்தானே இதற்கு அடி எடுத்துக் கொடுக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டில் சிங்களத்தை அரியணையில் ஏற்றுவதாக சிங்கள மக்களிடம் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்தார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க. இதே தேர்தலில் சிங்களம் மட்டும் அரியணையில் ஏறுவதை நாடாளுமன்றத்தின் உள்ளே ஜனநாயகமுறையிலும் நாடாளுமன்றத்துக்கு வெளியே சாத்வீக முறையிலும் எதிர்ப்பதற்கு தமிழ்பேசும் மக்களிடம் தந்தை செல்வா தலைமையிலானதமிழ் அரசுக்கட்சிஆணைபெற்றது.ஜூன் ஐந்தாம் திகதி நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதாவை பண்டாரநாயக்க கொண்டுவந்தார். இதை நாடாளுமன்றப் படிக்கட்டுகளில் ஒருநாள் பட்டினி கிடந்து சாத்வீக முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதாக தந்தை செல்வா உரியமுறையில் அரசுக்கு அறிவத்திருந்தார். தானும் தமது தொண்டர்கள் சிலரும் இதில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்திருந்தார் என்றார் பரமசிவம்.

இதை அன்றைய சிங்கள ஆங்கில ஊடகங்கள் செல்வநாயகமும் குழுவினரும் நாடாளுமன்றத்தை உடைப்பதற்காகச் செல்லப்போகிறார்கள் என்று செய்திகளைப் பரபரப்பாக வெளியிட்டிருந்தன என்று நான் சொன்னேன்.

இதனால்தான் படிகளில் பட்டினி கிடந்து சத்தியாக் கிரகம் செய்யச் சென்றவர்களை காடையர்கள் வழிமறித்து மண்டைகளை உடைத்து, காதைக் கடித்துத் துப்பித் தொடர்ந்து கொழும்பு நகரிலும் தமிழ் கடைகள் உடைக்கப்பட்டன. இங்கினியாகலயில் குடியேற்றப்பட்ட தமிழர் விரட்டியடிக்கப்பட்டனர். சிங்கள ஆங்கில ஊடகங்கள் தொடக்கிவைத்த இனவெறியாட்டத்துக்கு பண்டாரநாயக்கவும் அவரது சகாக்களும் தூபம்போட்டனர். ஒரு சிங்கள அரசியல் தலைவனோ ஆன்மீகத் தலைவரோ தமிழர்களின் சாத்வீகப் போராட்டம் வன்முறைக்கெதிரானது என்பதை எடுத்துச் சொல்லவில்லை. தமிழ் மக்கள் தமது நியாயத்தை எடுத்துச் செல்வதற்கு உரிமை இருக்கிறதென்பதையும் சொல்லவில்லை. இன்று ஆயுதப் போராட்டம் வளர்ந்து இன்று நாடு இந்த நிலைமைக்கு வருவதற்கு அந்த ஊடகங்களும் சிங்களத் தலைவர்களுமே காரணம் என்றார் பரமசிவம்.

இன்று மட்டும் என்னவாம். வடக்கு-கிழக்கில் என்ன நடந்தாலும் யார் கடத்தப்பட்டாலும் கொலை நடந்தாலும் கொள்ளை நடத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு புலிகள் கடத்தினார்கள், புலிகள் கொலை செய்தார்கள், கொள்ளையடித்தார்கள் என்று அரச ஊடகங்களும் இனவெறிபிடித்த தனியார் ஊடகங்களும் செய்திகளைப் பரப்புகின்றன என்றேன்.

சில தினங்களுக்கு முன் ஒரு சிங்களப் பத்திரிகையில் ஒருபக்கம் சுனாமி அலை எழுந்துவருகிறது, மறுபக்கத்தில் புலி நிற்கிறது, இடையில் ஒரு பொதுமகன் (சிங்களத்தில் ஏதோ எழுதப்பழட்டிருந்தது) நிற்பதாகக் கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்தது. இப்படி சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைளும் ஊடகங்களும் விடுதலைப் புலிகளை மிகக் கோரமான படுபயங்கரமாகச் சித்திரித்து செய்திகள், கட்டுரைகள், கதைகள் வெளியிடுவதுடன் கேலிச் சித்திரங்களும் வெளியிடுகின்றன என்றார் பரமசிவம்.

தெற்கில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, விடுதலைப் புலிகள் நேரடியாகவே நிவாரண உதவிகள் கொண்டுபோய்க் கொடுத்தனர். கடற்கோள் பேரழிவு ஏற்பட்டபோது, கிழக்கிலும் வடக்கிலும் உடனடியாகச் சென்று உதவி அளித்தவர்கள் விடுதலைப் புலிகள். ஆனால் யாருடைய போதனையோ கிழக்கில் மட்டும்தான் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டு அகதிகளாகத் தஞ்சமடைந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு அதிரடிப்படையும் உபத்திரவம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிரடிப்படைகள் எதற்காக? என்றேன் நான்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது அதிரடிப்படைகள் நிலை என்ன? பாதிக்கப்பட்ட பகுதிகள் புனரமைக்கப்படும்போது இந்தப் படைகளின் நிலை என்ன? இதுமட்டுமல்ல சமாதானப் பேச்சுத் தொடர்ந்து நாட்டில் சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது விடுதலைப்புலிகள்பற்றி வெறுப்பேற்படுத்தப்பட்டிருக்கும் சிங்கள மக்கள் எப்படித் தமிழ் மக்களுடன் கலந்து வாழ வழியேற்படும் என்றார் பரமசிவம்.

நாட்டில் உண்மையான சமாதானம் ஏற்படவேண்டுமானால் முதலில் அரச ஊடகங்களையும், சில ஆங்கில சிங்கள ஊடகங்களையும் சில மாதங்களாவது வாய்மூடி இருக்கச்செய்யவேண்டும். இல்லையேல் இனத்துவேஷத்தைத் தூண்டிவிடும் அல்லது இனத்துவேஷத்தைத் தூண்டக்கூடிய செய்திகள் மற்றும் படையெடுப்புகளை வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரமுள்ள ஓர் அமைப்பு உருவாக்கப்படவேண்டும். பொய்யான தகவல்களையும், குற்றச்சாட்டுகளையும் வெளியிடும் ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார் பரமசிவம்.

இதுமட்டுமல்ல அடுத்த தேர்தலைக் குறிவைத்து இனவெறியைத் தூண்டிவிடும் அரசியல்வாதிகளை என்ன செய்வது? என்றேன்.

ஊடகங்களும்சரி, அரசியல்வாதிகளும்சரி எத்தனை சுனாமிப் பேரழிவுகள் வந்தாலும் திருந்தப்போவதில்லை. தமிழ் மக்களும் இனி இலங்கையில் சமாதானம் வரும் என்ற நம்பிக்கையையும் இழந்துவிட்டனர் என்றே சொல்லவேண்டும் என்று சொல்லியபடியே எழுந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு

### பஸ்சேவை சீர்பெறுமா?

பருத்தித்துறையிலிருந்து 759 இலக்க வீதியூடாக சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் குறித்தநேர அட்டவணைக்கு அமைய சேவையை நடத்தாமையால் உரிய நேரத்தில் பயணம் செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது.

பருத்தித்துறை - கொடிகாமம், பருத்தித்துறை - முகமாலை, பருத்தித்துறை - சாவகச்சேரி ஆகிய பாதைகளுடான பஸ்சேவைகளேசீரற்றுள்ளன.

காலை 7.20 மணிக்கும் 8.05மணிக்கும் பருத்தித்துறை பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து முகமாலை மற்றும் கொடிகாமம் செல்லும் பஸ்கள் உரியநேரத்திற்கு செல்வதில்லை. இதுபற்றிக் கேட்டால் - பாடசாலைச் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அல்லது பழுதடைந்துவிட்டது என்றே கூறுகின்றனர்.

பருத்தித்துறையிலிருந்து செல்லும் பாடசாலை மாணவர்களும் அரச ஊழியர்களும் வியாபாரிகளுமே போக்குவரத்துச் சபை யினரின் அசமந்தப்போக்கினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குறித்த இடங்களுக்கான பஸ்சேவை எத்தனை மணிக்கு நடைபெறும் என நேரக்கணிப்பாளர்களிடம் கேட்டால், போனபஸ்கள் திரும்பிவந்துதான் போகும் என கூறுகின்றனர். அல்லது நடத்துனர், சாரதி இல்லை எனக்கூறி சமாளித்துவிடுகின்றனர்.

இந்தப்பாதையூடான போக்குவரத்தை சீர்செய்வது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

*பாதிக்கப்பட்ட அரசஊழியர் பருத்தித்துறை*

நேர்காணல்

ச.சேகர்

# வெஸ்ரன் யூனியனின் பணப் பரிமாற்ற சேவை

இலங்கை வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவைகளை வழங்குவதில் செலான் வங்கி 1993 ஆம் ஆண்டு முதல் மிக முக்கிய பங்காற்றி வருகிறது.

வெளிநாடுகளில் வசிப்போர் பணத்தை அதிவேகமாகப் பாதுகாப்பாக அனுப்புவதற்கும், பெறுவதற்குமான ஒரு செயற்திட்டமாக வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவை அமைந்துள்ளது.

இந்தச் சேவை அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கி வருவதுடன், "Fortune 500" என்னும் முதல் 500 இல் சிறந்த நிறுவனங்களுள் ஒன்றாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்தச் சேவையை 190 நாடுகளில் 55 ஆயிரம் கிளைகள் ஊடாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பெருமளவான இலங்கையர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் பெருமளவான பணத்தொகையை வெஸ்ரன் யூனியன் மூலம் இலங்கைக்கு அனுப்புகின்றனர். இதன் காரணமாக இலங்கைப் பொருளாதாரத்துக்குத் தேவையான அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுப்பதில், செலான் வங்கி கணிசமான பங்காற்றி வருகிறது.

செலான் வங்கியின் வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவைகளுக்கான அபிவிருத்தி சந்தைப்படுத்தல் முகாமையாளராக பணியாற்றி வரும் நயினா மரிக்கார் இந்தச் சேவையின் நடவடிக்கைகள் குறித்து மேலும் கருத்து தெரிவிக்கையில் -

2001 ஆம் ஆண்டு முதல் எமது சேவைகள் வாடிக்கையாளரின் வசதி கருதி விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அதாவது - இந்தச் சேவையை எமது 115 கிளைகளூடாக வழங்குவதுடன் நின்றுவிடவில்லை. நாம் மக்கள் வங்கியுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி, அவர்களின் 152 தெரிவு செய்யப்பட்ட கிளைகள் ஊடாகவும் இந்தச் சேவையை வழங்குகின்றோம்.

இந்தச் சேவையை பெறு வதற்கு செலான் வங்கியில் கணக்குகள் எதனையும் பேணவேண்டியதில்லை. மேலதிக சேவையைப் பெறவிரும்புவோர் கணக்குகளை ஆரம்பித்து, வெஸ்ரன் யூனியன் மூலம் வரும் பணத்தை கணக்கில் முதலீடு செய்து, தமது தேவைக்கு ஏற்ப பணத்தை நாடளாவிய ரீதியில் பரந்துள்ள எமது கிளைகள் ஊடாகவும், ATM ஊடாகவும் பணத்தை மீளப்பெறலாம்.

செலான் வங்கியின் சிறப்பான சேவையை கௌரவிக்கும் முகமாக 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற SLIM விருதுகள் நிகழ்வில் சிறந்த பணமாற்றுச் சேவைக்கான விருது வழங்கப்பட்டதுடன், 2004 ஆம் ஆண்டுக்கான 'பணமனுப்புபவர் சந்தையின் முன்னோடி' எனும் விருதும் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**பணத்தைப் பெறுவதற்கு**

வெளிநாடுகளிலிருந்து பணத்தை இலங்கைக்கு அனுப்புவதற்கு அருகிலுள்ள வெஸ்ரன் யூனியன் கிளையை நாடி, பணத்தை இலங்கையில் செல்லுபடியாகும் அடையாள அட்டையில் உள்ள உமது முழுப் பெயருக்கு அனுப்பச் செய்யலாம். அடையாள அட்டை இல்லாதோர் (Pay Without Identifiction..) 'அடையாள அட்டை இல்லாமல் பணத்தை செலுத்தவும்' எனும் விசேட முறையைப் பயன்படுத்தி பணத்தை இலகுவாகப் பெறலாம். இது இந்தச் சேவையின் விசேட அம்சமாகும்.

பணம் அனுப்பப்பட்டதும் அருகிலுள்ள செலான் வங்கிக் கிளைக்குச் சென்று, பணத்தைப் பெறுவதற்கான படிவத்தை முழுமையாக நிரப்பி, பணத்தை சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்.



பணத்தைப் பெறுவதற்காகச் செல்லும் போது பணம் எந்த நாட்டிலிருந்து அனுப்பப்பட்டது. அனுப்பியவரது பெயர், அனுப்பட்ட தொகை, பணப்பரிமாற்றல் இலக்கம் (MTCN) என்பவற்றை தெரிந்து வைத்துக் கொள்ளவும்.

**பணத்தை அனுப்புவதற்கு**

அருகிலுள்ள செலான் வங்கிக் கிளைகளுக்குச் சென்று, பணத்தை அனுப்புவதற்கான படிவத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய பணத்தொகையுடன் எந்தவொரு கிளையிலும் கையளிக்கவும். சகல உள்ளக செயற்பாடுகளும் நிறைவு பெற்றவுடன், வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றல் இலக்கத்தையும், அனுப்பிய தொகையையும் பணத்தைப் பெறுபவருக்கு அறிவித்து, பணத்தை அருகிலுள்ள வெஸ்ரன் யூனியன் கிளைக்குச் சென்று பெற்றுக் கொள்ளச் சொல்லலாம்.

சகல அந்நியச் செலாவணி வெளிப் போகும் பணப்பரிமாற்றல் சேவைகளும், இலங்கை மத்திய வங்கியின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவையாகும்.

இந்தப் புத்தாண்டில் வெஸ்ரன் யூனியன் மூலம் செலான் வங்கிக் கிளையில் பணத்தைப் பெறும் ஒவ்வொரு தடவையும் IDD தொலைபேசி அட்டை ஒன்று வீதம் இலவசமாக வழங்கப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கிக் கிளை முகாமையாளரை நாடவும். இந்தச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

எமது 24 மணிநேர இந்தச் சேவையைச் செலான் வங்கித் தலைமையகக் கிளையில் பெறலாம் எனத் தெரிவித்தார்.

---

கல்வியியல்

ஆர்.கே.மேனன்

# மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிப்பது எப்படி?

அறிவை விடக் கற்பனைத்திறன் மிகவும் முக்கியம் வாய்ந்தது என அல்பர்ட் ஐன்ஸ்ரன் என்கின்ற அறிஞர் கூறுகின்றார்.

வகுப்பறைகளில் இரண்டு வகையான மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் பிரச்சினையாக அமைகின்றனர். செயலூக்கம் குன்றியவர்கள். (Possive) செயலூக்கம் அதிகமாகக் கொண்டவர்கள் (Over Active ) இப்படியான செயலூக்கம் அதிக மாகக் கொண்டவர்கள் -ஆசிரியருக்கு அதிக எரிச்சலூட்டினாலும், செயலூக்கம் அற்ற மாணவர்கள் தான் தங்களுக்கேஅதிகமான அழிவைத் தேடிக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட செயலூக்கமற்ற மாணவர்கள் உருவாவதற்குப் பல அடிப்படைக் காரணங்கள் உண்டு.

**வகுப்பறைப் பாடங்கள் நடாத்தும் முறை**

கல்வித்திட்டமும், (கலைத்திட்டமும்) கல்வித்திட்டவிருத்திப்படி முறைகளில் உள்ள குறைபாடுகளும்.

நோய் அல்லது சமூக இயற்கைக் காரணங்கள்.

உணவு முறை போன்றவையாகும்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பேராசியர்களின் ஆய்வின் படி செயலூக்க மின்மையே இந்தக் கால கல்வி முறையில் காணப்படும் மாபெரும் இடது குழியாகும். மாணவர்களின் திறமைக்குச் சவாலாக விளங்கக் கூடிய அனைத்துக் கூறுகளையும் நீக்கிவிட்டு - அவன் எளிதில் தன்னிறைவோடும், மன மகிழ்ச்சியோடும் இருப்பதற்கு வழி வகுக்கிறது. இதன் ஒட்டுமொத்த விளைவாக இளைஞர்கள் தம் படைப்பாற்றலை வளர்ப்பதற்குத் தேவையான முயற்சி பலவீனமடைகிறது என்று அந்தப் பேராசிரியர் கூறினார்.

இப்படிப்பட்ட செயலூக்க மற்ற நிலையை மாற்ற வகுப்பறைகளைப் படைப்பாற்றலில் வெளிப்பாட்டுத் தளங்களாக மாற்றி அமைக்க வேண்டும்.

இத்தகைய மாற்றங்களின் மூலம் செயலூக்கம் அதிகமாகக் கொண்ட மாணவர்களுக்குப் போதியளவு செயற்பாடுகளும், செயலூக்கம் குன்றிய மாணவர்களுக்குப் போதிய அளவு உற்சாகமும் அளிக்க இயலும்.

ஓர் இளைஞன் தனக்குள்ளே மறைந்திருக்கும் படைப்பாற்றலைக் கண்டுணரும் போது, மனநிறைவும் ஆர்வமும் பெறுகின்றான். தனது படைப்பாற்றலின் மூலம் எவ்வாறு தனக்கும், பிறருக்கும் பயனுள்ள இளைஞர் களாகத் திகழ முடியு மென உணர்கின்றான்.

**எல்லோரும் படைப்பாற்றல் உள்ளவர்களே**

ஏதாவது படைக்க வேண்டும் என்கின்ற அவா எல்லோரிடத்திலும் காணப்படுகிறது. அழும் குழந்தையை அமைதிப்படுத்த முயலும் பெற்றோரிலும் சரி, மாணவனின் அறிவு ஆற்றலைத் தூண்டிவிட்டு (Curiosity ) கற்றலுக்கு வழிவகுக்கும் ஆசிரியரானாலும் சரி, அவர்கள் தங்கள் படைப்பாற்றலையே பயன்படுத்துகின்றனர்.

நமது உரையாடல்கள், தொலைபேசி மூலம் பிறரோடு கொள்ளும் தொடர்புகள், கடிதங்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றை ஆராய்ந்து பார்த்தால் நமது படைப்பாற்றலின் இயற்கையான வெளிப்பாடுகள் தெளிவாக விளங்கும். படைப்பாற்றலை ஒரு குழந்தை வெளிப்படுத்து வதற்குப் பயிற்சி தேவையென ஒரு சிலர் கூறுவார்கள்.

நியூயோக்கிலுள்ள ஆசிரியர் கல்லூரியின் கலைக்கல்வி இயக்குநர், முனைவர் ஸ்டான்லி சுயில்லஸ் பின்வருமாறு கூறுகின்றார்.

பள்ளி வாழ்க்கை ஆரம்பிக்கு முன் ஒரு குழந்தை மிகுந்த படைப்பாற்றல் உள்ளதாகக் காணப்படுகிறது. பாரம்பரியமாகப் பின்பற்றி வரும் கல்வி முறையின் காரணமாக, நமது கற்பித்தல் பணி அந்தக் குழந்தையின் கற்பனைத் திறனை ஒடுக்கி விடுகிறது.

**படைப்பாற்றல் மிக்க மாணவர்களிடம் காணப்படும்பண்புகள்.**

எதையும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் (Curiosity)

எதிலும்விழிப்புணர்வு (Awareness)

படைப்பாற்றல் உள்ள மாணவர்கள் தங்களைச் சுற்றி நிகழும் யாவற்றையும் விழிப்புணர்வுடன் கவனிப்பார்கள்.

**மாணவர்களின் படைப்பாற் றலை ஊக்குவிக்க வல்ல ஆசிரியர் யார்?**

எதிர்பாராத அம்சங்களை வரவேர்ப்பர்.

இத்தகைய ஆசிரியர்கள் படைப்பாற்றல் மிக்க மாணவர்களின் எதிர்பாராத செயற்பாடுகளினால் எரிச்சல் அடைய மாட்டார்கள். அவர்களது எதிர்பாராத, ஆனால் ஆக்கபூர்வமான செயல்களை வரவேற்பர்.

**அவர் தனது தவறுகளை ஏற்றுக் கொண்டு சிரிக்கக் கூடிய பரந்த உள்ளம் உடையவர்.**

மாணவர்களின் எதிர்பாராத கேள்விகள் நம்மைத் திக்குமுக்காடச் செய்யலாம். அதனால் தவறும் ஏற்படலாம். ஆனால் தவறை உணர்ந்தவுடன் அவற்றை நகைச்சுவையுடன் ஏற்றுக் கொள்ளும் போது, நமது மதிப்பு குறைவதில்லை. நமது குறைபாடுகளை ஏற்றுக் கொள்வதால், நிலை மோசமடையப் போவதில்லை.

**அவர் கற்பனையைப் போற்றுபவர்.**

கற்பனை செய்வது மாணவர்களுக்கு மிகவும் பிடித்தமானதொன்று. நமது வகுப்பறைகளில் மாணவர்கள் கற்பனை செய்வதற்குப் பெரும்பாலும் இடமளிப்பதில்லை. எல்லாக் கற்பனைகளும் காலத்தை விரயமாக்கும் செயலாகக் கருதமுடியாது. எமது வாழ்க்கையில் பெரும்பாலான பகுதி, ஏன் வாழ்க்கை முழுவதும் கூட கற்பனையில் கண்டவற்றை நனவாக்கும் முயற்சியில் தான் கழிவதாகக் கூறப்படுகிறது.

ஆகையால் ஒரு நல்ல ஆசிரியர் - மாணவர்களைக் கற்பனை செய்யும்படி ஊக்குவிப்பார். மாணவர்கள் செய்யும் கற்பனைகளை அவனுக்கும், அவனுடைய சுற்றுப்புறச் சூழலுக்கும் பயன் அளிக்குமாறு ஒரு நல்ல சிற்பி போல் அவற்றைச் செதுக்க முற்படுவார்.

**புதிய கருத்துக்களை ஏற்பதில் திறந்த மனது (Openness)**

நேர்மாறான கருத்துக்கூட அவர்கள் உள்ளத்தில் இடமுண்டு. முரண்பாடான காரியங்களை முறைப்படுவதில்புதிய யுத்திகளைக் கையாளுவார்கள். இரண்டு மூன்று கருத்துக்களை இணைத்து ஒரு புதுக்கருத்தை தோற்றுவிப்பார்கள். குறைகளைக் கண்டால் அவை தங்களின் செயற்பாடுகளில் தோன்றினாலும் சரி, பிறர் செயற்பாடுகளில் தோன் றினாலும் சரி அவற்றை நீக்கிச் சிறப்பாகச் செயற்பட வழி கண்டுபிடிப் பதில் தீவிரமாக இருப்பார்கள்.

**சுதந்திர மனப்பான்மை**

படைப்பாற்றல் மிக்கவர்களிடம் நிறைந்த சுதந்திர மனப்பான்மை காணப்படும். மற்றவர்களுக்கு அஞ்சித் தங்கள் உள்ளத்தில் தோன்றும் புதுமையான கருத்துக்களை மறைக்க மாட்டார்கள். எளிதில் மாற்றிக் கொள்ளவும் மாட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் கர்வம் கொண்டவர்களாகவும், பிடிவாதக்காரர்களாகவும் கருதப்பட வாய்ப்புண்டு. இந்த விதமான போக்கினால்தான் எடிசனும், ஐன்ஸ்ரீனும் தங்கள் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

**விடாமுயற்சி**

படைப்பாற்றலுடையவர்கள் தோல்விகளால் சோர்வடைய மாட்டார்கள். திரும்பத்திருப்ப தோல்வியைத் தழுவினாலும், தொடர்ந்து முயற்சி செய்வார்கள். எடிசன் மின் விளக்கைக் கண்டுபிடிக்கும் முன் - ஆயிரம் முறை முயன்றும் தோல்வியையே தழுவினார். ஆனால் அந்தத் தோல்விகளையும், வெற்றியாகக் கருதினார். ஆயிரம் பொருட்கள் மின் விளக்கிற்குப் பயன்படாது என்று கண்டு பிடித்தேனே! என்று கூறினர்.

**வகுப்பறையில் படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கு வழிகள்**

ஆர்வமூட்டும் சூழலை உருவாக்க வேண்டும்.

தோல்வி மனப்பான்மை ஏற்படுத்தும் ஏளனம், படைப்பாற்றலைத் தடை செய்யும். ஒருவரிடம் முயற் சியின்மை ஒன்றுதான் பெருந் தோல்வி என்னும் கருத்து வலியுறுத்தப் பெற வேண்டும். குழந்தைகளின் கற்பனைத் திறனைப் பெரியோர்கள் ஊக்குவிக்காமல் அடக்கிவிட்டால், அந்தக் கற்பனைத் திறன் மறைந்துவிடும்.

**பலவித வேறுபாடுகளே (Variety) கற்றலுக்கு சுவையூட்டுகின்றன.**

எழுதுவதில், பாடுவதில், ஓவியங்கள் வரைவதில், நடிப்பதில், சுயசிந்தனைக்கு வழிவிடுங்கள். ஓர் இசை விழாவிற்குத் தலைமை தாங்கிய ஒரு கலைஞர் இசை விழாக்களில் சுயமாக இராகத்தைக் கட்டிப் பாடும் பாடல்களுக்குத் தனிப்பரிசு அளிக்க வேண்டுமென்று கூறினார்.

தனிப்பட்ட பயிற்சி இல்லாத போது கூட, இளைஞர்கள் தங்கள் படைப்பாற்றலைப் பயன்படுத்தி சொந்தமாக மெட்டைக் கட்டிப் பாட இயலும்.

இவ்வாறு ஊக்குவிக்கப்பட்டால், சில ருடைய படைப்பாற்றல் வியத்தகு வகையில் வெளிவரும் என்று கூறினார்.

**புலன்களின் செயற்பாடுகளை வளர்க்க வேண்டும்.**

ஏறக்குறைய எல்லா அறிவுக் கூறுகளும் - ஐம் புலன்கள், கற்பனை ஆற்றல் இவற்றின் வழியாகவே ஏற்படுகின்றன.

ஐம்புலன்களால் உணர்ந்த அறிவுப் தொகுப்பே கருத்துக்களை உருவாக்குகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய தொகுப்புக்களின் மூலம் படைப்பாற்றல் புதிய கருத்துக்களைத் தேற்றுவிக்கிறது. ஆகையால், ஐம்புலன்களைப் பயனுள்ள வகையில் ஈடுபடுத்தப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

கூர்ந்து பார்த்தல், கூர்ந்து கேட்டல் இவ்வாறு பார்த்தவற்றையும், கேட்டவற்றையும் துல்லியமாக எடுத்துக் கூறுதல். தொடு உணர்ச்சி மூலம் பொருட்களை உணர்தல் போன்றவற்றைப் பயிற்றுவிக்க வாய்ப்புகள் தரப்படவேண்டும்.

எதையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் (Curio Sity) ஊக்குவிக்கப்பட வேண்டும்.

தங்களுக்கு புதிராகத் தென்படும் எதைக் குறித்தும் மாணவர்கள் வினாக்களைத் தொடுக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். இவற்றுக்கு முதலில் அவர்களே பதில்காண வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று எதையும் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை என்னும் உண்மையை மாணவர்கள் அறியும் படிச் செய்ய வேண்டும். (தொடரும்...)



# மரணப் படுக்கையில் பாப்பரசர்
# தற்காலிக பொறுப்பில் காமில்லோ!

(வத்திக்கான்)

உலக கத்தோலிக்க மதத் தலைவர் பாப்பரசர் இரண்டாம் ஜோன்போலின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதால், தற்காலிக பொறுப்பை கர்தினால் காமில்லோ ஏற்றுள்ளார்.

பாப்பரசர் இரண்டாம் ஜோன்போல் அண்மைக்காலமாக கடும் உடல்நலக் குறைவால் அவதிப்பட்டு வருவது தெரிந்ததே. கடும் மூச்சுத் திணறல் காரணமாக அவர் ரோம் நகரில் உள்ள கெமல்லி மருத்துவமனையில் 28 நாட்கள் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். அதன் பின்னரும் நிலைமை சீரடையவில்லை.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை பாப்பரசர் இரண்டாம் ஜோன்போலுக்கு மாரடைப்பும், மூச்சுத் திணறலும் ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு வத்திக்கானில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அவருக்கு - நோயில் பூசுதல் (அவஸ்தை பூசுதல்) சடங்கு அளிக்கப்பட்டது. பாப்பரசர் இனிமேற் பிழைத்து வருவார் என்ற நம்பிக்கை குறைந்து விட்டதால், அவரது இடத்தில் கர்தினால் காமில்லோ ருயினி (வயது 84) தற்காலிகமாகப் பொறுப்பேற்றுள்ளார்.



சென்பீற்றர் தேவாலயத்தில் பாப்பரசருக்காகப் பிரார்த்திக்கும் மக்கள்



நாளைய தெரிவிற்காக...

உலகம் முழுவதுமுள்ள 110 கோடி றோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களையும் பாப்பரசருக்காகப் பிரார்த்தனை செய்யும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாப்பரசர் மற்றும் கத்தோலிக்கத் திருச்சபையின் செய்தித் தொடர்பாளரான ஜோக்கின் நவாரோவும் இதேபோன்று வேண்டுகோள் விடுத்துள்ளார். இதையடுத்து உலகம் முழுவதும் பாப்பரசருக்காக சிறப்புத் திருப்பலிப் பூசைகள் நடந்து வருகின்றன.

பாப்பரசருக்கு கடும் மூச்சுத் திணறல் ஏற்பட்டிருப்பதால் அவருக்கு செயற்கை முறையில் சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரது உடல்நிலை குறித்து மருத்துவர்களால் உறுதியாக எதுவும் சொல்ல முடியவில்லை. இந்த நிலையில் பாப்பரசர் எந்த நேரத்திலும் மரணத்தைத் தழுவலாம் எனக் கருதப்படுகிறது.

கடந்த 26 ஆண்டுகளாகப் பாப்பரசராக இரண்டாம் ஜோன் போல் பதவியிலிருந்து வருகிறார். பாப்பரசர்களில் மிக நீண்ட காலம் இந்தப் பதவியை வகித்தவர் இவர்தான். இவர் இதுவரை 130 நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு எழு லட்சத்து 75 ஆயிரம் மைல் தூரம் பயணம் செய்துள்ளார்.

கிறிஸ்தவர்களின் புனித பூமியான இஸ்ரேலுக்குச் சென்று ஜெருசலேம் நகரில் பிரார்த்தனை நடத்தியுள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பை இவர் நேரடியாகக் கண்டித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பாப்பரசரான இரண்டாம் ஜோன்போல் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். 1920 ஆம் ஆண்டு பிறந்த இவர் 1978 ஆம் ஆண்டு பாப்பரசராகப் பதவியேற்றார்.

பாப்பரசர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் இயற்பெயர் மாற்றப்பட்டு பாரம்பரிய பெயர் வைக்கப்படும். தற்போதுள்ள பாப்பரசரின் இயற்பெயர் கரோல் வோஜ் டிலா. இவர் பாப்பரசர் பதவிக்குத் தெரிவானதும் இரண்டாம் ஜோன் போல் என்று பெயர் சூட்டப்பட்டார்.

கடந்த 27 ஆண்டுகளாக கத்தோலிக்கர்களின் தலைவராக இருந்த இவர் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டதால், புதிய பாப்பரசரைத் தேர்வு செய்வதற்கான ஆயத்தப் பணிகள் வத்திக்கான் நகரில் தொடங்கிவிட்டன. புதிய பாப்பரசர் பாரம்பரிய மரபுப்படி தேர்ந்தெடுக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாப்பரசர் மரணமடைந்ததும் வத்திக்கான் நகர அதிகாரிகள் தங்களுக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் தாமாகவே இழந்துவிடுவார்கள். அந்த அதிகாரங்கள் அனைத்தும் வத்திக்கான் நகரிலுள்ள அப்போஸ்தல அரண்மனைச் செயலரிடம் சென்றுவிடும்.

பாப்பரசரின் இறுதிச் சடங்குகள் முடிந்த பின்னர் பாப்பரசரைத் தெரிவு செய்யும் ரகசியத் தேர்தலை நடத்தும் அதிகாரமும் இவருக்குத் தான் உள்ளது. பாப்பரசர் மரணம் அடைந்த இரண்டு வாரத்துக்குள் புதியவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது விதியாகும்.

அந்தக் கால கட்டத்துக்குள் இவர் ரகசியத் தேர்தலுக்கு வருமாறு அழைப்பு விடுப்பார். அதை ஏற்று கர்தினால்கள் அப்போஸ்தல அரண்மனைக்குச் சென்று ரகசியத் தேர்தலில் வாக்களிப்பார்கள். இந்த வாக்கெடுப்பு அரண்மனையிலுள்ள சிஸ்டின் பிரார்த்தனை கூடத்தில் நடைபெறும். உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலுள்ள நூற்றியிருபது கர்தினால்கள் வாக்களித்து, புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வர். கடைசியாக எடுத்த கணக்கெடுப்புப் படி 119 கர்தினால்கள் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 90 சதவீதம் பேர் தற்போது வத்திக்கான் நகரிலுள்ளனர்.

வாக்களிப்பு நடைபெறும் தினத்தன்று 119 கர்தினால்களும் அப்போஸ்தல அரண்மனைக்குச் சென்றதும். அரண்மனையில் ஜன்னல்கள், கதவுகள் மூடப்படும். அங்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். எந்த கர்தினாலுக்கு மூன்றில் இரண்டு பங்கு பேரின் ஆதரவு கிடைக்கிறதோ அவர் புதிய பாப்பரசராக அறிவிக்கப்படுவார்.

அப்படி மூன்றில் இரண்டு பங்கு வாக்குக் கிடைக்காவிட்டால், மீண்டும் மீண்டும் ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

30 தடவைகள் ரகசிய வாக்கெடுப்பு நடத்திய பின்னரும் எவருக்கும் பெரும்பான்மை கிடைக்காவிடில் புதிய விதிமுறை கடைப்பிடிக்கப்படும். அதன்படி வாக்களிக்கும் கர்தினால்களில் சரிபாதி எண்ணிக்கையில் கூடுதலாக ஒரு வாக்குப் பெறுபவர் புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்படுவார்.

இதற்குத் தயாராக கர்தினால்கள் வத்திக்கான் நகரிலுள்ள சந்தா மராத்தா ஹவுஸ் ஹோட்டலில் தங்கியுள்ளனர்.

புதிய பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டதும் அதைக் குறிக்கும் வகையில் அரண்மனையில் வெள்ளைப் புகை விடப்படும்.

இதைப் பார்த்ததும் வத்திக்கான் மக்கள் தங்களுக்குப் புதிய பாப்பரசர் வந்துவிட்டார் என்று மகிழ்ச்சி வெள்ளத்தில் குதிப்பார்கள்.

புதிய பாப்பரசரை ரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவுசெய்ய இயலாவிட்டால் கறுப்புப் புகை வெளிவிடுவார்கள்.

ஆனால் இந்தத் தடவை அதற்கு அவசியம் ஏற்படாதென கர்தினால்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புதிய பாப்பரசர் பதவிக்கு இந்தியாவைச் சேர்ந்த கர்தினால் இவான் டயஸ் அதிக வாய்ப்புடன் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புலிகளுடன் இணையச்சென்ற சிறுமி யுனிசெவ் அதிகாரியிடம் ஒப்படைப்பு!

தமது அமைப்பில் இணைந்து கொள்ளவந்த சிறுமி ஒருவரை நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்ட யுனிசெவ் அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறை தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வு அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் பிரதேசத்திலுள்ள புலிகளின் மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

14 வயதுடைய ஜீவராசா ஜெயந்தினி என்ற சிறுமியே நேற்றுமுன்தினம் காலை 11.30 மணியளவில் யுனிசெவ் அமைப்பின் அம்பாறை மாவட்ட பாதுகாப்பு அதிகாரி லாராஸ்கொட்டிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சுய விருப்பின் பேரில் இந்தச் சிறுமி தம்மிடம் இணைந்துகொள்ள முன்வந்தபோதும் - 18 வயதுக்குக் குறைந்தவர்களை தமது அமைப்பில் இணைத்துக்கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருப்பதாக இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி தமது அமைப்பில் இணைந்துகொள்வதற்கு இந்தச் சிறுமி வந்ததாகவும், சிறுமியின் எதிர்காலக் கல்வி நடவடிக்கையைக் கருத்திற்கொண்டு தாம் யுனிசெவ் அதிகாரிகளிடம் அந்தச் சிறுமியைக் கையளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## யு.எல்.எம். முகைதீன் காலமானார்

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யு.எல்.எம் முகைதீன் தனது 69 ஆவது வயதில் நேற்று கொழும்பில் காலமானார்.

நீண்டகால அரசியல்வாதியான இவர் 1995 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

அந்தக் கட்சியின் ஸ்தாபகர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் மறைவையடுத்து அந்தக் கட்சியிலிருந்து விலகி பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியில் இணைந்துகொண்டார்.

இவரின் ஜனசா நல்லடக்கம் நேற்று மாலை இடம்பெற்றது.

# பயணிகள் மீது படையினர் கெடுபிடி

(அம்பாறை)

அம்பாறை அக்கரைப்பற்று பகுதிகளில் பயணிகள் மீதான படையினரின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தின் காஞ்சிரங்குடா மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளுக்குப் பிரயாணம் செய்யும் பயணிகள் பல இடங்களில் மறிக்கப்பட்டு, விசேட அதிரடிப்படையினரால் கடுமையாகச் சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும், விசேட அதிரடிப்படையினரின் இந்தச் சோதனை நடவடிக்கையால், தாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.




## சுற்றாடல் இயற்கை வள அமைச்சில்...

சுற்றாடல் இயற்கை வள அமைச்சிலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, குறிப்பிட்ட கல்வித்தகைமையும் ஏனைய தகைமையும் உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுற்றாடல் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 25. கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சுற்றாடலியல் அல்லது இயற்கை விஞ்ஞானம் போன்ற பாடங்களில் விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றிருத்தல். கணினி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 01. கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பப் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

ஊடக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பதவி வெற்றிடங்கள் 02. கல்வித் தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொதுசன ஊடகப் பாடத்துடன் கலைமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆராய்ச்சி உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 05. கல்வித் தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் . சட்ட உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 02. கல்வித்தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டமானிப் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

ஏனைய தகைமையாக விண்ணப்பதாரி 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பிறப்புச் சான்றிதழின் பிரதி, பட்டச் சான்றிதழின் பிரதி, நன்னடத்தைச் சான்றிதழ்கள் இரண்டின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து 2005-04-29 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சுற்றாடல் இயற்கை வள அமைச்சு இலக்கம் - 82, சம்பத்பாய ராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

## சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சில்...

சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் கீழ் அபிவிருத்தி உதவியாளர், சட்ட உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு பின்வரும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரியாக இருத்தல்வேண்டும். சட்ட உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் சட்டமானிப் பட்டதாரியாக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பதாரி அமைச்சினால் நடத்தப்படும் நிறுவனமய நேர்முகப் பரீட்சையின் பின்பே தெரிவுசெய்யப்படுவார்.

விண்ணப்பப் படிவத்தின் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 2005.04.15 அன்றோ அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு - செயலாளர், சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, இல.780, மரு தானை வீதி, கொழும்பு - 10. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தொழில் விடுமுறை விஸா பிரிட்டன் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தொழில் விடுமுறை விஸா நடைமுறையை பிரிட்டன் நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உட்பட சில நாடுகளில் கடந்த வருடம் அறிமுகம் செய்யப்பட்ட இரு வருடங்களுக்கான தொழில் முறை விஸா நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் தூதரகம் அறிவித்துள்ளது.

மறு அறிவித்தல் வரை தொழில் விடுமுறை விஸா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியா, பொட்ஸ்வானா, நமீபியா ஆகிய நாடுகளிலும் இந்த விஸா முறை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை கையளித்துவிட்டு நேர்முகத் தேர்வுக்கு காத்திருப்பவர்களுக்கு அனுமதிக் கட்டணங்கள் மீள வழங்கப்படும்.

அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அவற்றைக் கையாள்வது தொடர்பில், இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (01)

# கிழக்குப் பல்கலையில் மருத்துவபீடம்!

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு முதல் மருத்துவபீடம் செயற்படும் என, நேற்று நடைபெற்ற கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரைநிகழ்த்திய பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் ரீ.வரகுணம் தெரிவித்தார்.

அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள மருத்துவ பீடத்தில் 50 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பினை நிறைவு செய்த 350 மாணவர்களுக்கு நேற்று பட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பட்டமளிப்பு நிகழ்வில் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் சூசன் பிளன்கற் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (01)

# படையினரின் ...

படுகாயமடைந்தார்.

மேற்படி மாணவி - பாடசாலைக்குச் சென்று விட்டு, சங்கத்தானை - புளியடி சந்திப் பகுதியிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் இறங்கி வீதியோரமாக நின்றபோது - இராணுவத்தினரின் பீல்ட் பைக் மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியது.

இதனையடுத்து அவ்விடத்தில் பெருமளவிலான மக்கள் ஒன்றுகூடினர். இதற்கிடையில் இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு செல்ல முற்பட்டபோது - அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் நீதி விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் மோட்டார் சைக்கிளை எடுக்கக்கூடாது எனக் கூறிய போதிலும் - அதையும் மீறி படையினர் செயற்பட்டபோது மோட்டார் சைக்கிளுக்கு தீயிடப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் - கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் குண்டாந்தடிப் பிரயோகத்தை மேற்கொண்டும் பொதுமக்களைக் கலைக்க முற்பட்டனர்.

எனினும், சம்பவ இடத்துக்கு வருகைதந்த சாவகச்சேரி அரசியற்துறைப் போராளிகள், அங்கு ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணித்தனர். இதன் காரணமாக நிலைமை வழமைக்குத் திரும்பியது. எவ்வாறாயினும், மாலை 7 மணிவரை சாவகச்சேரிப் பகுதியில் பெருமளவிலான கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

காயமடைந்த மாணவி, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ,29)

# புளொட் மோகன் கொலை

# சந்தேக நபர்கள் நால்வரையும் கல்கிசை நீதிமன்றம் விடுதலை!

(கொழும்பு)

புளொட் மோகன் என்றழைக்கப்பட்ட கந்தையா யோகராஜா கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நான்கு சந்தேக நபர்கள் கொழும்பு கல்கிசை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களை விடுதலை செய்வதாக கல்கிசை நீதிமன்ற நீதிபதி அதுலவிக்கும் களுஆராய்ச்சி அறிவித்தார்.

சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு அண்மையில் கல்கிசை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர்கள் மீதான விசாரணைகளைத் தொடர்வதற்கான போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருந்தார். இதனையடுத்தே, சந்தேக நபர்களை விடுதலை செய்வதற்காக நீதிபதி அதுலவிக்கும் களு ஆராய்ச்சி அறிவித்தார்.

நீதிபதியின் உத்தரவையடுத்து கைதுசெய்யப்பட்டு கடந்த ஆறு மாதங்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களான ஆர். ரவீந்திரன், ஏ.ஜெயக்குமார், எச்.ஆர். சில்வா மற்றும் மொகமட் நிசாம் ஆகியோரே நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்ட புளொட் மோகன், கடந்த வருடம் ஜூலை மாதம் 31 ஆம் திகதி கொழும்பு டுப்ளிகேஷன் வீதியில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமஷ்டி ஆட்சிமுறைக்கு ஹெலஉறுமய கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

நாட்டில் சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுத்தப்படுவதற்கு ஜாதிகஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை ஒரே நாடாகவே இருக்கவேண்டும். ஒரே நாடுஎன்ற கொள்கையை கருத்துக்கணிப்பு மூலம் மாற்றுவதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியையும் ஜாதிகஹெல உறுமய கடுமையாக எதிர்த்துப் போராடும்.

ஜனாதிபதி சந்திரிகா நினைப்பது போன்று - சமஷ்டிஆட்சி முறை ஏற்படுத்தப்படுவதை ஒரு போதும் அனுமதிக்கமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 5000 ரூபா கொடுப்பனவு இம்மாதத்துடன் நிறுத்தம்!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் மாதாந்தம் வழங் கப்பட்டுவரும் 5000 ரூபா கொடுப்பனவு இந்த மாதத்தின் பின்னர் இடைநிறுத்தப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாதத்துக்கான கொடுப்பனவை இடை நிறுத்திய பின்னர் அரசாங்கத்தின் மூலம் பராம ரிக்கப்படும் இடம்பெயர்ந்தவர்களுக்கு சமுர்த்தி போன்ற திட்டங்களில் இணைத்துக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

# கொலையே செய்தாலும் ஜனாதிபதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது!

## அமைச்சர் பௌசி

(கொழும்பு)

ஜனாதிபதி கொலையே செய்தாலும் அவரை நீதிமன்றத்துக்கு வரவழைக்க முடியாது. அவருக்கெதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கமுடியாது. அந்த வகையிலேயே தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டம் வடி வமைக்கப்பட்டுள்ளது.

எனவே தான் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றியமைத்து, பிரதமர் நாடாளுமன்றத்துக்கு பதிலளிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தியமைக்கவுள்ளோம். இதற்கு சகல இனத் தவரும் தமது ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்று வனவள சுற்றாடல் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

திளர் பரிசோதனை அதிகாரிகளுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் காலை வனவள, சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது -

பிரதமர் உட்பட நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சட்டத்துக்கு முன் சமம். எனவே, வன வளத்தை அழிப்போர் அல்லது வன விலங்குகளை வேட்டையாடுவோர் எந்த சமூக அந்தஸ்தில் இருந்தாலும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுங்கள்.

உங்களது நடவடிக்கைகளுக்கு நான் பூரண ஒத்துழைப்பு வழங்குவேன். உங்கள் கடமையை நிறைவேற்றத் தயக்கம் காட்டாதீர்கள். எமது வனவளம் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இந்த நிலையைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. வனவளத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது எனத் தெரிவித்தார்.

# பாப்பரசர்..

மூட்டில் ஏற்பட்ட உபாதையால் சத்திரசிகிச் சைக்கும் உள்ளான போதிலும் இறுதி மூச்சு இருக்கும் வரை தனது பணி தொடரும் என்று அறிவித்திருந்தார்.

பார்க்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்ட பாப்பரசர் இம்மாதம் 14ஆம் திகதியுடன் வரலாற்றில் அதிக காலம் பாப்பரசராகப் பணியாற்றிய மூன்றாவது பாப்பரசராக உருவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நுநாறி...

மோட்டார் ஸ்சைக்கிளை ஓட்டிவந்த இவரது ஒன்றுவிட்ட அண்ணனான பரிமளதாசன் சுதர்சன் (வயது 30) கழுத்துப் பகுதியில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இத்தாலிய வெளியுறவு ...

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் கடந்த வியாழக்கிழமை மாலை ரோம் நகருக்குச் சென்றனர்.

வெளியுறவு அமைச்சகத்தின் ஆசியா ஓசியானா, பசுபிக் மற்றும் அந்தாட்டிக்கா பிராந்தியங்களுக்கான துறையின் இயக்குநர் க்ள்யூடியோ பசிபிக்கோவை இவர்கள் சந்தித்துப் பேசினர்.

ரோமின் வெளியுறவு அமைச்சக வளாகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இத்தாலிய வெளியுறவு அமைச்சகத்தில் இப்பிரிவானது ஆசியா, ஓசியானா, பசுபிக் மற்றும் அந்தாட்டிக்கா பிரதேசங்களின் 37 நாடுகளின் இருதரப்பு வெளியுறவு விவகாரங்களை கவனித்து வருகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் மற்றும் பொருண்மிய வளர்ச்சியிலும் இந்த அமைப்பு மிகுந்த அக்கறை செலுத்தி வருகின்றது.

சுதந்திர தேசமாக கிழக்குத் திமோர் மலருவதில் இத்தாலிய அரசு நேரடிப் பங்காற்றியது. இத்தாலிய அரசின் சார்பில் வெளியுறவு அமைச்சகத்தின் இப்பிரிவினரே சிறப்பாகப் பங்காற்றியிருந்தனர்.

திமோருக்கு சர்வதேசப் படைகளை அழைத்து வந்ததிலும், புதிய அரசுக்கான நிர்வாகக் கட்டமைப்பை திமோரில் உருவாக்குவதிலும் இத்தாலி பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது.

சுனாமியில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்காக இத்தாலிய அரசு மற்றும் இத்தாலி மக்கள் சார்பிலான ஆழ்ந்த இரங்கலை தமிழீழக் குழுவினரிடம் இயக்குநர் க்ள்யூடியோ பசிபிக் தெரிவித்தார்.

பின்னர் தமிழீழ அரசியல் விவகாரக்குழுவின் தலைவரான தமிழ்ச்செல்வனிடம், சுனாமிக்கு பிந்திய மீளமைப்புப் பணிக்கான பொதுக் கட்டமைப்பின் தற்போதைய சூழல் பற்றி கேள்வி எழுப்பினார்.

அமைதிப் பேச்சில் தமிழ் மக்களின் நம்பிக்கை நீடித்திருக்க வேண்டும் என்பதிலும் இயக்குநர் க்ள்யூடியோ பசிபிக் அதிக ஆர்வம் எடுத்துக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

பொதுக்கட்டமைப்பு கோரிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்ததற்கான காரணத்தை அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் விளக்கிக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

சுனாமி தாக்கிய காலத்தில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், மக்கள் அமைப்புகள், உள்ளூர் அரச அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து முழுவீச்சில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்து அணிகளும் மீளமைப்புப் பணிகளை மேற்கொண்டன.

இந்த ஒருங்கிணைந்த செயற்திட்டம் மீள் பணிகளில் குறிப்பிடத்தக்க வெற்றியை அளித்தது. இதையடுத்தே எமது தேசியத் தலைவர், மீளமைப்புப் பணிகளை முழுமையடையச் செய்ய பொதுக்கட்டமைப்பு ஒன்றின்கீழ் இணைந்து பணியாற்ற வருமாறு இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இதை நோர்வே அனுசரணையாளர் குழுவும் ஏற்றுக்கொண்டது.

ஆனால், வருத்தம் அளிக்கிற வகையில் அரசு இதுவரையிலும் இந்தப் பொதுக்கட்டமைப்புக் குறித்து எவ்வித முடிவும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் நோர்வேயின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பங்களிப்புக் குறித்தும் - அரசு தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையையும் ஏற்படுத்தாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

போரினால் சிதைவடைந்த தமிழர் தாயகப் பகுதிகளில் எவ்வித மீள் கட்டமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இப்பேச்சுவார்த்தைகளால் இடம்பெயர்வுக்குள்ளான தமிழ் மக்கள் மீளவும் அவர்களது வாழ்விடங்களில் குடியமர்த்தப்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் பெரும் எண்ணிக்கையில் இராணுவம் குவிக்கப்பட்டிருந்ததால், மீளத் திரும்ப இயலாத மக்கள் அகதி முகாம்களில் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் வாழ்ந்து வந்தனர்.

அந்தச் சூழலில்தான் சுனாமிப் பேரலையும் ஏற்பட்டது. அதனால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்தனர் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிப்பதிலும், அமைதிப்பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதிலும் இத்தாலி தனது முழு ஒத்துழைப்பையும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு அளிக்கும் என்றும் இந்தச் சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டது.

சுனாமி மீளமைப்புப் பணிகளில் இத்தாலிய மக்களின் தன்னெழுச்சியான பங்களிப்புக்கு நன்றியையும் தமிழ் மக்கள் சார்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆசியா, ஓசியானா, பசுபிக் மற்றும் அந்தாட்டிக்கா பிராந்தியங்களுக்கான துறையின் துணை நிர்வாக இயக்குநர் அலெக்சாண்ட்ரோ சீவெஸ் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

# அமெரிக்க காங்கிரஸ்...

தெரியவருகிறது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டெனி டேவிஸ் -

விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்துடன் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார்.

ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சியை வந்தடைந்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினருடன் அவரது சேவைகள் இயக்குநரான டனி எப்.கன்ரலும் உடன் வந்திருந்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் முல்லைத்தீவுக்குச் சென்ற இவர்கள், அங்கு சுனாமியால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களை நேரில் பார்வையிட்டதுடன், பொதுமக்களுடனும் உரையாடினர்.

நேற்றுப் பிற்பகல் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், சுகாதார அதிகாரிகள், கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர்.

பின்னர் - புதுக்குடியிருப்பிலுள்ள காந்தரூபன் அறிவுச்சோலைக்கு விஜயம் செய்தனர். அங்கு அவருக்கு இல்லச் சிறுவர்கள் பான்ட் வாத்திய வரவேற்புக் கொடுத்தனர்.

இதையடுத்து கிளிநொச்சி திரும்பிய டெனிஸ் டேவிஸ், நேற்றிரவு - இரணைமடுச் சந்தியிலுள்ள கிளிநொச்சி பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது - அரசியல், அபி விருத்தி, புனர்வாழ்வு, மீள்கட்டுமான விடயங் கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

சிக்காக்கோ மாகாணத்திலுள்ள இலனியஸ் என்ற 7 ஆவது காங்கிரஸ் மாவட்டத்தை 1996 ஆம் ஆண்டு முதல் டேவிஸ் பிரதிநிதித்துவம் செய்து வருகிறார்.

ஜனநாயகக் கட்சியின் சார்பில் கறுப்பு கோகஸ் மக்களின் பிரதிநிதியாக இவர் செயற்பட்டு வருகிறார்.

அமெரிக்காவின் உயர்மட்ட மக்கள் பிரதிநிதி ஒருவர் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்திருப்பதும், புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருப்பதும் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைபேசி இயக்குநர் தேவை

கணனி அறிவுள்ள, தொலைபேசி இயக்குநர் ஒருவர் (பெண்) தேவை.

தொடர்புகளுக்கு :
தில்லையம்பதி தொலைத்தொடர்பு நிலையம்
கோண்டாவில் சந்தி
T.P :021 222 2488
(அ-3991)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.